# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**<u>ந.க.எண் : 9623 / 2012 / எம்சி. 8 நாள் : 21.09.2012</u>**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 24.09.2012 திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல் /

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - செப்டம்பர் 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | சுகாதாரப் பிரிவு - கோவை தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - 110 பயனாளிகள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தேர்ச்சி திறனற்ற பணியாளர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு கல்வித்தகுதி விலக்களித்து ஓட்டுநர் பணியிடம் வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| 3 | கணக்கு பிரிவு – புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் – மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் 01.07.2012 முதல் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைவதற்கு தொகை செலுத்துதல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| 4 | பணியமைப்பு – Executive Seminar on 'Cities and Climate Change' 26.09.2012 முதல் 28.09.2012 முடிய சிங்கப்பூர் நாட்டில் நடைபெற உள்ளது – வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பங்குபெறுதல் – அரசின் அனுமதி பெற அனுப்பப்பட்ட கருத்துருவிற்கு மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| 5 | பணியமைப்பு – Eco Mobility Seminar வரும் 18.11.2012 முதல் 23.11.2012 முடிய தென்கொரியா நாட்டில் நடைபெறுவது – கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பங்குபெற அரசின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| 6 | கணக்கு பிரிவு – தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் கடன் பெறப்பட்டது – நிலுவைத் தொகை ரூ.9,60,09,160 – குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் மறு கடனாக 7.10 சதவீத வட்டியில் வழங்க முன் வந்தது – மேற்படி கடன் தொகை வழங்க கோரி 30.08.2012ம் தேதிய ஆணையரால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பின்னேற்பு கோருதல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| 7 | வடக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு - வார்டு எண். 40 - ஹிந்துஸ்தான் அவென்யூ மனைப்பிரிவு - குடியிருப்போர் நல சங்கத்தினரால் பூங்கா அமைக்கப்பட்டது – பராமரிக்க அனுமதி அளித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு -மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கவுண்டம்பாளையம் - வடவள்ளி, கூட்டு குடிநீர் திட்டத்தில் தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் வழங்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருதல் – மின்வெட்டு காரணமாக சரிவர குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்படுதல் – 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் பெற்று கூடுதல் குடிநீர் பெற தமிழ்நாடு மின் வாரியம் மூலம் டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும், மதிப்பீட்டுத் தொகை ரூ48,66,880/- (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் இத்தொகையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்தில் பிடித்தம் செய்யவும் மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக |
| 9 | பொது சுகாதார பிரிவு - கோவை ரோட்டரி கிளப் சங்கம் மூலம் தானியங்கி மின்சார இருதய துடிப்பு மறு சீரமைக்கும் கருவி ( AED- Automated Electrical Defibrillators) – மூன்று மாநகராட்சி பேருந்து நிலையங்களில் நிறுவுதல் மற்றும் வாடகை கட்டணம் இல்லாமல் பயன்படுத்திக்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 10 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜென்னி ரெசிடென்சி கிளப்பில் எதிர்பாராத விதமாக விஷவாயு தாக்கி மரணமடைந்த திரு.கே.ஆனந்தன் மற்றும் திரு.அசோக் ஆகியோரது வாரிசுகளுக்கு துப்புரவு பணியாளர் பணியிடம் வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைத்தல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடர்பாக. |
| 11 | பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – 163 பயனாளிகள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | பொது சுகாதாரம் - உக்கடம் கழிவுநீர் பண்ணைக்கு அருகில் தெரு நாய்கள் கருத்தடை மையம் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 13 | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்தி பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 14 | பொறியியல் பிரிவு – ஆழியார் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குறிச்சி குனியமுத்தூர் பகுதிகளுக்கு சீரான குடிநீர் வழங்கவும், மின்தடையை நிவர்த்தி செய்யவும் மதிப்பீட்டுத் தொகை ரூ79,19,230/- தனி மின்பாதை தமிழ்நாடு மின்வாரியம் மூலம் டெபாசிட் பணியாக மேற்கொள்ளுதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் -தொடர்பாக. |
| 15 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண் 5,6 மற்றும் 7 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை எட்டு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண் 8 மற்றும் 9 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை எட்டு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 17 | பொது சுகாதாரம் -சுவர்ண ஜெயந்தி திட்டம் – நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் 2012–13 தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது – மாமன்ற அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |
| 18 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 25 -கிருஷ்ணசாமி வீதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வணிக வளாகம் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 54,00,000-க்கு நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 57 – மசக்காளிபாளையம் பிரதான சாலையில் வணிக வளாகம் கட்டும் பணி – ரூ.56 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 20 | பொறியியல் பிரிவு - 26 எண்ணிக்கையிலான கட்டண முறை பொதுக் கழிப்பிடங்கள் தனியார் பங்களிப்புடன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்தல் - விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 21 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 41- தமிழநாடு வீட்டு வசதி வாரியம் - கணபதி கிராமம் - காந்தி மாநகர் பேஸ்டு I/II மற்றும் III எனும் சைட் அண்டு சர்வீஸ் ஸ்கீம் மனைப்பிரிவு சமுதாயக்கூடத்திற்கு(கம்யூனிட்டி சென்டர் ) என ஒதுக்கப்பட்ட மனை இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் இடத்தினை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு வழங்குதல் மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 22 | பணியமைப்பு - சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் (SUNYA – ZERO WASTE MANAGEMENT PROJECT ) திட்டத்தின் கீழ் வரும் 29.10.2012 முதல் 31.10.2012 முடிய நேபாள நாட்டில் இத்திட்டம் தொடர்பாக கலந்து ஆலோசனை மேற்கொள்ள வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான பொறியாளர்கள் பங்குபெறுதல் – அரசின் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |

| | |
|---|---|
| 23 | பணியமைப்பு - 18.10.2012 முதல் 20.10.2012 முடிய சியோல் நகரம், கொரியா நாட்டில் நடைபெற உள்ள General Meeting of the World Mayors Council on Climate Change and the Opening of new ICLEI East Asia Secretariat – கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள் பங்குபெற – அரசின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| 24 | கணக்குப் பிரிவு - மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான கட்டணம் – தொகைகளின் அடிப்படையில் அபராதக் கட்டணங்கள் நிர்ணயம் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 25 | கல்வி பிரிவு - மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் PTA மூலம் நிரப்பப்பட்ட முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஊதிய செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 26 | பணியமைப்பு –கோயம்புத்தூர் மாநகராட்சியில் காலியாக உள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்களை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நிரப்புவது– மன்றத்தின் அனுமதி வேண்டுதல் –தொடர்பாக. |
| 27 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் மற்றும் மின் விளக்கு பராமரிப்பு சம்பந்தமான பணிகளை மேற்பார்வை செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் - மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டுதல் தொடர்பாக. |
| 28 | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | பொறியியல் பிரிவு - "ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டத்தின்கீழ்" (IUDM) பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்ற பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள "125" சாலைகளை புதுப்பித்தல் பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு அரசு மானியம் பெறப்பட்டதை மாமன்றத்தின் பதிவிற்கு வைத்தல் –மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக. |
| 30 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 97 – தக்காளி மார்க்கெட்டிலுள்ள வணிக வளாக கடைகள் - மறுஏலம் மற்றும் மின் ஏலம் நடைபெற்றது – உச்சகேள்விதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 31 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் – மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்தல் - மன்றத்தின் அனுமதி பெறுதல் - தொடர்பாக. |
| 32 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 31- புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கடைகள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – உச்சகேள்விதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 33 | மேற்கு மண்டலம் -வருவாய் பிரிவு - 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012, 25.4.2012 10.5.2012, 20.6.2012 மற்றும் 25.7.2012 -ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - மறுஏலம் கோருதல் மற்றும் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 34 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 10 – மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் உள்ள குத்தகை இனங்கள் - குத்தகை இனத்தை ஒப்படைப்பு செய்ததை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு- வார்டு எண்.5,9 மற்றும் 16 வணிக வளாக கடைகள் - மூன்றாண்டு உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 36 | மேற்கு மண்டலம் -வார்டு எண்.22, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை B-11 காவல் நிலையத்திற்கு நிலபரிவர்த்தனை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 37 | கிழக்கு மண்டலம் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல்- |

| | |
|---|---|
| **38** | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை எண்- 2-க்கு 31.08.2012ம் தேதியில் நடைபெற்ற பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **39** | கிழக்கு மண்டலம் - நகரமைப்பு பிரிவு -57-வது வார்டு - மசக்காளிபாளையம் ரோடு, காமராஜர் ரோடு – தனியார் நிலம் பேச்சுவார்த்தையின் மூலம் கையகப்படுத்தி இணைப்பு ஏற்படுத்துதுல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **40** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - குத்தகை இனங்கள் - மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – மறுஏலம் கோருதல் மற்றும் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **41** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு -வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில் உள்ள வணிக வளாக கடை எண்.1,3,4 மற்றும் 5 - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| **42** | மத்திய மண்டலம் - ஒ மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் – மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி பெறுதல் - தொடர்பாக. |
| **43** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு – 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் அண்ணா வணிக வளாக கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் மன்றத்தின் அனுமதி பெறுதல் - தொடர்பாக |
| **44** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு -வார்டு எண். 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மாநகராட்சி வணிகவளாக கடைகள் - மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - மன்றத்தின் அனுமதி பெறுதல் - தொடர்பாக. |
| **45** | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - திரு.வி.க.மார்க்கெட் மாநகராட்சி வணிகவளாக கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - மன்றத்தின் அனுமதி பெறுதல் - தொடர்பாக. |
| **46** | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் கிராமம் - க.ச.எண் 433/1 (நகர புல எண் 36, பிளாக் 26, சர்வே வார்டு எண் 34) நத்தம் புறம்போக்கில் 25 வருட'களுக்கு மேல் வீடுகள் கட்டி வசித்து வரும் 55 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழ்'க இசைவு தெரிவித்தல் - தொடர்பாக |
| **47** | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம் - வீட்டுமனைப்பட்டா வழ்'கும் திட்டத்தின்கீழ் உப்பிலிபாளையம் கிராமம் - க.ச.எண் 298/2 மற்றும் 304/2 இட்டேரி புறம்போக்கில் 5 வருட'களுக்கு மேல் வீடுகள் கட்டி வசித்து வரும் 32 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழ்'க ஆட்சேபனை தெரிவித்தல் - தொடர்பாக |
| **48** | பொறியியல் பிரிவு - 4 மண்டலங்களில் மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துதல் - ஏற்கனவே பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்ததாரர்களே முந்தைய விலைப்புள்ளிக்கே பணியினை தொடரவும் அதற்குண்டான செலவினத்தை ஏற்கவும் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக- |
| **49** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடனுதவி பெற்று வணிகப் பயன்பாட்டுக் கடைகள் கட்டுதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **50** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 61 - ஒண்டிப்புதூர் பகுதியில் குப்பை கொட்டும் நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி - மதிப்பீடு. ரூ. 69,90,000 – மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

**(குறள் - 1023)**

**விளக்கம்**

தம் குடிமக்களை உயர்த்த உழைப்பவர்களுக்கு, இயற்கையின் ஆற்றல் வரிந்து கட்டி முனைந்து முன்நின்று வழிகாட்டி உதவும்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் : 1**

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 27 புதிய பேருந்து வழித்தடங்களை ஏற்படுத்தும் ஆணையை பிறப்பித்து அவ்வழித்தடங்களில் இயக்குவதற்கு 99 பேருந்துகளை புதியதாக வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றிகளை காணிக்கையாக்குகிறது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் : 2**

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ஆறு எண்ணிக்கை ஆரம்ப சுகாதார நிலையங்களும் அவற்றுள் நான்கு எண்ணிக்கை ஆரம்ப சுகாதார நிலையங்களை மாநகராட்சி பகுதிகளிலும் ஏற்படுத்தி செயல்படுத்துவதற்கு ஆணை பிறப்பித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகிறது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் : 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்டு வரும் பல்வேறு தொழில்களின் வளர்ச்சியினாலும், கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளின் வளர்ச்சி மற்றும் எண்ணிக்கை அதிகரிப்பினாலும் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. வர்த்தக ரீதியாக இம்மாநகருக்கு வந்து செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்நிலையில் இம்மாநகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலை வசதிகள் தற்போதுள்ள சாலை உபயோகிப்பாளர்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாததால் பெருமளவில் வாகன போக்குவரத்து பிரச்சனை ஏற்பட்டு பொதுமக்கள் குறிப்பாக பள்ளி, கல்லூரி, அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு செல்வோர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மாநகராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மோனோ ரயில் திட்டம் போன்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்த ஆணை பிறப்பித்து இம்மாநகரின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு ஏற்படுத்தி கொடுத்திட இம்மாமன்றம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோரிக்கையை சமர்ப்பிக்கிறது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் : 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீர்வடிகால் / மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் ஆகியவற்றில் பிளாஸ்டிக் பைகளால் அடைப்புகள் ஏற்படுவதன் காரணமாக கொசு உற்பத்தி அதிகரித்து பொதுமக்களுக்கு பொது சுகாதார தொல்லை ஏற்படுவதுடன் பல நோய்கள் பரவுவதற்கு காரணமாக அமைகிறது என கண்டறியப்பட்டுள்ளது. பொது மக்களின் பொது சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் இந்த பிரச்சனையை கட்டுப்படுத்த வேண்டியது மாநகராட்சியின் கடமையாகும்.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 40 மைக்ரான் தடிமனுக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் பைகளை விற்பனை செய்யும் மற்றும் உபயோகப்படுத்தும் வணிக நிறுவனத்தின் மீது ஏற்கனவே அமலில் உள்ள சட்ட விதிகளின் கீழ் மாநகராட்சி அலுவலர்கள் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் : 5**

தற்போது நிலவி வரும் மின்சார பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மின்சிக்கன நடவடிக்கையாகவும், சீரான மின்விநியோகம் அனைத்து தரப்பினருக்கும் கிடைக்கச் செய்திடும் நடவடிக்கையாகவும், மாநகராட்சி எல்லைக்குள் உள்ள ஆடம்பர மற்றும் அலங்கார விளக்குகள் மற்றும் முக்கிய சாலையின் இருபுறங்களில் உள்ள விளம்பர பலகையின் விளக்குகள் போன்றவற்றிக்கு பயன்படுத்தப்படும் மின்சார பயன்பாட்டு அளவைக் குறைக்க கட்டுப்பாடுகள் விதிக்க மாநகராட்சி நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் : 6</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி 37வது வார்டு பகுதியில் செயல்பட்டு வரும் ஜென்னி ரெசிடென்சி நிறுவனத்தின் செயல்பாடுகள் மீது பல புகார்கள் வந்திருக்கின்றன. மேற்படி நிறுவனம் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதற்குரிய செயல்பாடுகள் மட்டுமே அங்கு நடைபெறுகின்றனவா என்பதை பற்றி மாநகராட்சி அதிகாரிகளை கொண்டு ஆய்வு செய்ய வேண்டும். மேலும் மாநகராட்சி அதிகார எல்லைக்குட்படாத மற்ற செயல்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை மூலம் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறையை மாநகராட்சி நிர்வாகம் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் : 7</u>**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி சமீபத்தில் நடைபெற்று முடிந்த கோவை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் திரு.சிங்கை.எஸ்.பாலன், திரு.ஆர்.வெண்தாமரைபாலு, திருமதி.எஸ்.மணிமேகலை ஆகிய மூவருக்கும் இம்மாமன்றம் தனது இதயமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் : 8</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மீண்டும் ஒருமுறை பெருமை சேர்க்கின்ற அளவிற்கு நமது மாநகராட்சியால் நடத்தப்பட்டு வரும் மருத்துவமனைகள், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் தரமான சேவையை பொது மக்களுக்கு அளித்து வருவதை அங்கீகரித்து, 6 மருத்துவமனைகளுக்கு ISO தரச்சான்றிதழ் கிடைக்கப் பெற்றுள்ளதை பாராட்டி, மாநகராட்சி ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அனைவருக்கும் இம்மாமன்றம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 1

பொருள் :- உதவித் தொகை - கோவை தெற்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது - தொடர்பாக.

*******

கோவை தெற்கு வட்டத்தில் முதியோர் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரணை செய்து 110 பயனாளிகளை கண்டறிந்து, இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்களுக்கு உதவித் தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இப்பரிந்துரையினையேற்று தகுதியுடைய மொத்தம் 110 பயனாளிகளுக்கும் முதியோர் ஓய்வூதியம் / உதவித் தொகை பெறுவதற்காக வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண். 1748/2012/எம்.இ. 6.

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 197 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தேர்ச்சி திறனற்ற பணியாளர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு கல்வித்தகுதி விலக்களித்து ஓட்டுநர் பணியிடம் வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்ய – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

****

இம்மாநகராட்சியில் பணிபுரிந்துவரும் தேர்ச்சி திறனற்ற பணியாளர் மற்றும் துப்புரவு பணியாளர்களில் கீழ்க்கண்ட பணியாளர்கள் கனரக வாகன உரிமம் பெற்று, 10ம் வகுப்பு தேர்ச்சி பெறாமலும் இடைமுறிவு பெற்றும் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு அரசாணை 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.26.09.1996ல் தெரிவித்துள்ள கல்வி தகுதியான 10ம் வகுப்பு தேர்ச்சியை விலக்களித்து கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு ஓட்டுநர் பணியிடம் வழங்குவது குறித்து, மாமன்ற ஒப்புதல் பெற்று அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் இடம் | பதவி | கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்ற நாள் | நிரந்தர பணியாளராக பணியில் சேர்ந்து 5 வருடம் முடித்த நாள். | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | எம். மகாராஜன், தெற்கு மண்டலம் | தேர்ச்சி திறனற்ற பணியாளர் | 10.08.1992 | 1989 | 10ம் வகுப்பு இடைமுறிவு. |
| 2 | சி.செல்வகுமார்/ சின்னப்பன் வடக்கு மண்டலம். | துப்புரவு பணியாளர் | 24.08.1999 | 20.03.2006 | 10ம் வகுப்பு தோல்வி |
| 3 | விஜயன்/முனியன், கிழக்கு மண்டலம். | துப்புரவு பணியாளர் | 14.05.2002 | 19.02.2012 | 10ம் வகுப்பு தோல்வி |
| 4 | முருகவேல், தெற்கு மண்டலம். | துப்புரவு பணியாளர் | 11.10.2002 | 20.02.2012 | 10ம் வகுப்பு தோல்வி |
| 5 | கே.நாராயணன் / கிட்டான், வடக்கு மண்டலம். | துப்புரவு பணியாளர் | 26.09.2010 | 20.02.2012 | 10ம் வகுப்பு தோல்வி |
| 6 | ராமு/திருமன், மேற்கு மண்டலம். | துப்புரவு பணியாளர் | 25.04.2007 | 21.02.2012 | 10ம் வகுப்பு தோல்வி |

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 5924/2012/எம்சி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 198 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் – மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் 01.07.2012 முதல் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைவதற்கு தொகை செலுத்துதல் – சம்பந்தமாக.

பார்வை
1. அரசாணை எண்.243/நிதி (ஊதியம்) துறை நாள்.27.04.2012.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் ந.க.எண்.29308/2012/LA2, நாள்.19.07.2012.

---------

பார்வையில் காணும் அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தமிழ்நாடு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாநகராட்சி பணியாளர்களுக்கு 01.07.2012ம் தேதி முதல் பணியிலுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் மாத சந்தா தொகை ரூ.150/– வீதம் பிடித்தம் செய்யப்பட வேண்டும் எனவும் ஒரு வருட சந்தா தொகையாக ரூ.1800/–ம் மற்றும் நிர்வாக பங்கு தொகை ரூ.290/–ம் சேர்த்து நபர் ஒருவருக்கு ரூ.2090/– வீதம் முன்பணமாக மாவட்டக் கருவூலத்தில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வருட காலத்திற்குள் (ஜூலை 2012 முதல் ஜூன் 2013 வரை) பணி ஓய்வு பெறுபவர்கள் மற்றும் காலமாகும் பணியாளர்களுக்கான சந்தா தொகையை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ காப்பீட்டு சந்தா தொகை செலுத்த 5 மண்டல அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகத்திலிருந்து 01.07.2012–ம் தேதிய நிலவரப்படி பணியாளர்களின் பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| மண்டலம் | பணியாளர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | வருவாய் நிதி | குடிநீர் மற்றும் வடிகால் நிதி | |
| கிழக்கு மண்டலம் | 589 | 32 | 621 |
| மேற்கு மண்டலம் | 603 | 75 | 678 |
| மத்திய மண்டலம் | 1142 | 119 | 1261 |
| தெற்கு மண்டலம் | 455 | --- | 455 |
| வடக்கு மண்டலம் | 429 | 48 | 477 |
| பிரதான அலுவலகம் | 339 | 16 | 355 |
| மொத்தம் | 3557 | 290 | 3847 |

எனவே, 3847 பணியாளர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.2090/– வீதம் (வருட சந்தா 1800 + நிர்வாக பங்குத் தொகை Rs.290/-) மொத்தம் ரூ.80,40,230/– (2090 x 3847) மாவட்டக் கருவூலத்தில் DPC 0075 00 800 BN 0002 என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, வருவாய் நிதியிலிருந்து 3557 பணியாளர்களுக்கு ரூ.74,34,130/–ம் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து 290 பணியாளர்களுக்கு ரூ.6,06,100/–ம் மாவட்ட கருவூலத்தில் செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது. அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கும் பணியாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப இதேபோல் சந்தா தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகையினை வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் 6680/2012/பி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 199 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் 4**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – Executive Seminar on ‘Cities and Climate Change’ **26.09.2012** முதல் **28.09.2012** முடிய சிங்கப்பூர் நாட்டில் நடைபெற உள்ளது – வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பங்குபெறுதல் – அரசின் அனுமதி பெற மன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: Program Coordinator, GIZ-CDIA அவர்களின் கடிதம் **25.07.2012** (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் **16.08.2012**)

-----

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் **26.09.2012** முதல் **28.09.2012** முடிய சிங்கப்பூர் நாட்டில் நடைபெற உள்ள Executive Seminar on ‘Cities and Climate Change’ ல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்களை பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள ஆகும் மொத்த செலவினங்களையும் Cities Development Initiative for Asia (CDIA), the Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ) GmbH and the Singapore Ministry of Foreign Affairs ஏற்றுக் கொள்வதால் இம்மாநகராட்சிக்கு எவ்வித செலவினமும் இல்லை.

எனவே மேற்கூறிய Seminar ல் கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் அரசின் அனுமதி பெற அனுப்பப்பட்ட கருத்துருவிற்கு பின்னேற்பு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். **109/2011/எம்சி6**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 200 நாள் : 24.09.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – Eco Mobility Seminar வரும் **18.11.2012** முதல் **23.11.2012** முடிய தென்கொரியா நாட்டில் நடைபெறுவது – கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பங்குபெற அரசின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை : மேயர், சாங்வான் நகரம், தென் கொரியா அவர்களின் கடித நாள் **26.08.2012**

--------

பார்வையில் கண்ட கடிதத்தில் **18.11.2012** முதல் **23.11.2012** முடிய சாங்வான் நகரம், தென் கொரியா நாட்டில் நடைபெற உள்ள Eco Mobility Seminar-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள ஆகும் பயண செலவில் 50% தொகை மற்றும் அனைத்து இதர செலவுகளையும் சாங்வான் நகரம் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கூறிய கூட்டத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கலந்து கொள்ளவும், பயண செலவின் 50% பயணத் தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கவும் அரசின் அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : அனுமதிக்கலாம். ந.க.எண். **109/2011/எம்சி6**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 201 நாள் : 24.09.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் மூன்றின் (TNUDF) கீழ் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம், கோயம்புத்தூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக ரூ.1350 இலட்சங்கள் கடன் வழங்கியுள்ளது. இதன் வட்டி விகிதம் 8.08 சதவிகிதம் ஆகும்.

இந்நிலையில் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மேற்படி கடன் தொகையில் நிலுவையில் இருந்த தொகை ரூ.1174.75 இலட்சத்தினை மறு கடனாக வழங்க முன்வந்தது. அதன் வட்டி விகிதம் 7.50 சதவிகிதம் ஆகும். இது தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) நிறுவனத்தின் வட்டி விகிதத்தைவிட குறைவாக இருந்ததால் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.62/10.08.2011–ல் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் வழங்க முன்வந்த மறுகடனைப் பெறுவதற்கும் அதற்கான விதிமுறைகளை முழுமையாக பின்பற்றவும் தீர்மானம் நிறைவேற்றி அதன் விபரம் மேற்படி நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம் மூன்றின் (TNUDF) கீழ் பெறப்பட்ட கடன் தொகை ரூ.13,50,00,000/–யில் 31.08.2012 வரை செலுத்தியது போக 01.09.2012ம் தேதியில் ரூ.9,60,09,160/– கடன் நிலுவையாக உள்ளது. இத்தொகையினை குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மறு கடனாக வழங்க உத்தேசித்து மேற்படி தொகை தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) நிறுவனத்திற்கு செலுத்துவதாகவும், அதற்கான வட்டி விகிதம் 7.10 சதவிகிதம் எனவும் தற்போது நிர்ணயித்துள்ளது. இது ஏற்கனவே குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) தெரிவித்த 7.50 சதவிகிதத்திலிருந்து 0.40 சதவிகிதம் குறைவாக உள்ளது. தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம் மூன்றின் (TNUDF) கீழ் பெறப்பட்ட கடனுக்கான வட்டி விகிதம் 8.08 சதவிகிதத்தை விட வட்டி 0.90 சதவிகிதம் குறைவாக உள்ளது. இதன் மூலம் இம்மாநகராட்சிக்கு ரூ.28.14 இலட்சம் வட்டி தொகை சேமிக்க இயலும்.

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற கடிதத்தில் மேற்கண்டவற்றின் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளை ஏற்று மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.
நிபந்தனைகள்:

1. கடன் தொகை ரூ.9,60,09,160/–ஐ 24 காலாண்டுகளில் 6 வருடத்திற்குள் திருப்பி செலுத்த வேண்டும்.

2. இக்கடனுக்கான வட்டி 7.10 சதவிகிதத்தை 01.09.2012 முதல் 31.08.2018 வரை செலுத்தப்பட வேண்டும். இவ்வட்டியானது காலாண்டிற்கு ஒரு முறை நிலுவையிலுள்ள கடன் அசல் தொகைக்கு ஏற்ப செலுத்தப்பட வேண்டும்.

3. இது தொடர்பாக வங்கியில் தனிக்கணக்கு (Escrow Account) துவக்கி பராமரிக்கப்பட வேண்டும்.

4. குறிப்பிட்ட காலக்கெடுவில் அசல் மற்றும் வட்டி தொகை செலுத்தப்படாவிட்டால் அவற்றை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாநில நிதிக்குழு பகிர்மான நிதியிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் நிதியில் பிடித்தம் செய்யப்படும்.

5. ஒரு வருடத்திற்கான அசல் மற்றும் வட்டித் தொகையினை (தோராயமாக ரூ.175 இலட்சம்) கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் பெயரில் கூட்டாக (Joint Account) நிரந்தர முதலீடு செய்யப்பட வேண்டும்.

6. இது தொடர்பாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) நிர்ணயிக்கும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திடம் (WSPF) நிலுவையாக உள்ள 9,60,09,160 ரூபாயினை கடனாக பெற ஆணையர் அவர்களால் 30.08.2012ல் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.8180/2003/பி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 202 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 7

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண். 40 - ஹிந்துஸ்தான் அவென்யூ மனைப்பிரிவு - குடியிருப்போர் நல சங்கத்தினர் பூங்கா பராமரித்தல் சம்பந்தமாக

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 40 க்கு உட்பட்ட ஹிந்துஸ்தான் அவென்யூ குடியிருப்போர் நல சங்கத்தினர் அங்கீகரிக்கப்பட்ட ஹிந்துஸ்தான் மனைப்பிரிவு பகுதியில் (ம.வ/ கோ.உ.தி.கு.எண் 169/2004) உள்ள பூங்கா ஒதுக்கீடு இடத்தில் மேற்படி குடியிருப்போர் நல சங்கத்தினர் நடைபாதை (Paver Block), சிறுவர் விளையாடுமிடம், சிறுவர்கள் விளையாடும் சாதனங்கள் மற்றும் புல்தரை அமைத்துள்ளார்கள். இதனை தாங்களே பராமரித்துக் கொள்ள மாநகராட்சியின் அனுமதியினை கோரியுள்ளர்கள் .

மேற்கண்ட ஹிந்துஸ்தான் அவென்யூ மனைப்பிரிவு கிருஷ்ணராயபுரம் கிராமம் க.ச.எண் 134 பாகம் மற்றும் 135 பாகத்தில் அமைந்துள்ளது. ம.வ/கோ.உ.தி.கு எண் 169/2004 என எண்ணிடப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சியால் R.F.54/04612/04/H2(N) நாள் 12.09.2005ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இடத்தில் மேற்கண்ட குடியிருப்போர் நல சங்கத்தினரால் அமைக்கப்பட்டுள்ள நடைபாதை பூங்கா மற்றும் சிறுவர்கள் விளையாடுமிடத்தினை பராமரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு மட்டும் பராமரிக்கும் உரிமையை மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று வழங்கலாம்.

1. இப்பூங்கா இப்பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவானது இப்பூங்காவினை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தும் நிலையில் நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.
2. குடியிருப்போர் நல சங்கத்தினர் மேற்கண்ட பூங்கா இடத்தினையோ/ பூங்காவில் செய்யப்பட்டுள்ள வசதிகளையோ எந்தவிதத்திலும் உரிமை கொண்டாடக் கூடாது .
3. மின் இணைப்பு ஏதும் பெறப்பட்டால் ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் பெயரிலேயே பெறப்பட வேண்டும் அதற்குண்டான கட்டணத்தை (Consumption Charge) குடியிருப்போர் நல சங்கத்தினரே செலுத்தி கொள்ள வேண்டும்.
4. மேற்கண்ட பூங்கா இடத்தில் நிரந்தரமான கட்டிடங்கள் ஏதும் கட்டக்கூடாது.
5. பொதுமக்களிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கக்கூடாது.
6. பராமரிப்பு பணியில் குறைபாடுகள் ஏதும் இருப்பது கண்டறியப்பட்டாலோ, பொதுமக்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்பட்டாலோ அல்லது மாநகராட்சிக்கு திருப்தி அளிக்கும் வகையில் இல்லாமல் இருந்தாலோ எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக பராமரிப்பு உரிமை இரத்து செய்யப்படும்.
7. இந்த பராமரிப்பு உரிமை ஒரு வருட காலத்திற்கு மட்டுமே பொருந்தும்.
8. பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் ஒலி/ஒளி பெருக்கிகளை பயன்படுத்தக்கூடாது.
9. மத சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் எதுவும் மேற்கண்ட பூங்கா பகுதியில நடத்தக்கூடாது.

எனவே மேற்கண்ட நிபந்தனைகளுடன் ஒரு வருட காலத்திற்கு மேற்கண்ட பூங்கா இடத்தினை பராமரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. அனுமதிக்கலாம் ந.க எண். 09547 / 20012 / எச்1 (வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 203 நாள் : 24.09.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கவுண்டம்பாளையம் -வடவள்ளி, கூட்டு குடிநீர் திட்டத்தில் தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் வழங்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள **6** மணி நேர மின்வெட்டு காரணமாக நாளொன்றுக்கு **10.418** MLD குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு, **8.5** MLDஅளவிற்கு குடிநீர் வழங்கப்படுவது போதுமானதாக இல்லாத காரணத்தால், **24** மணி நேரமும் மின்சாரம் வழங்க, தனி மின்பாதை அமைத்தல் மற்றும் மின் ஆக்கி நிறுவுதல் பணிக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரியதன்பேரில் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து கேட்பு தொகை (மதிப்பீட்டுத் தொகை) ரூ**48,66,880/-** பெறப்பட்டுள்ளது.

எனவே, தற்பொழுதுள்ள மின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு **24** மணி நேரமும் தடையில்லா மின்சாரம் பெற்று கூடுதல் குடிநீர் பெற தமிழ்நாடு மின் வாரியம் மூலம் டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும், மதிப்பீட்டுத் தொகை ரூ**48,66,880/-** (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தவும் இத்தொகையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்தில் பிடித்தம் செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண்.9526/2012/ப.வ.(எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 204 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பொருள் :- மருத்துவ கருவி நிறுவுதல் - கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - கோவை ரோட்டரி கிளப் சங்கம் மூலம் தானியங்கி மின்சார இருதய துடிப்பு மறு சீரமைக்கும் கருவி ( AED-Automated Electrical Defibrillators) – மாநகராட்சி பேருந்து நிலையங்களில் நிறுவுதல் - அனுமதி கோரியது - தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகருக்கு பல இடங்களிலிருந்து பேருந்து மூலம் வரும் பொது மக்களுக்கு தலைசுற்றல் மயக்கம், இருதய வலி மாரடைப்பு ஆகியவை திடீரென்று வருவதால் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்படுகிறார்கள் என்றும் சிலருக்கு முதலுதவி செய்ய காலதாமதம் ஆவதால் மரணம் எதிர்பாராமல் ஏற்படுகிறது என்றும், எனவே, இதை தடுப்பதற்கு தானியங்கி மின்சார இருதய துடிப்பு மறு சீரமைக்கும் கருவியை (AED-Automated Electrical Defibrillators) பயன்படுத்தி திடீர் மரணத்தை தடுக்கலாம் என்று தெரிவித்தும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் தினந்தோறும் அதிகமாக மக்கள் வந்து போகும் 3 பேருந்து நிலையங்களில் இக்கருவியை வைத்து, பொது மக்களுக்கு சேவை செய்வதற்கு அனுமதி அளிக்குமாறு தலைவர், ரோட்டரி கிளப், கோவை அவர்கள் தனது 17.07.2012ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

அதன்படி, நகர்நல மைய பெண் மருத்துவ அலுவலர்கள், கீழ்க்கண்ட 3 பேருந்து நிலையங்களை நேரில் சென்று ஆய்வு செய்து AED கருவி வைக்கும் இடத்தை பேருந்து நிலைய அமைப்பு வரைபடத்தில் அடையாளமிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1) | மத்திய பேருந்து நிலையம் | - | காந்திபுரம் - 3வது தளம், 54வது வார்டு அலுவலத்திற்கு அருகில் |
| 2) | உக்கடம் பேருந்து நிலையம் | - | பொள்ளாச்சி பேருந்துகள் நிறுத்தும் தளம் |
| 3) | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் | - | திருச்சி, கரூர் பேருந்து நிறுத்தும் நடைமேடையில் உள்ள நேரம் காப்பாளர் அலுவலகம் அருகில் |

மேற்படி கருவியின் அளவு உயரம் 2½ அடியும், அகலம் 1½ அடியும், உள்ளளவு 9 அங்குலமும் ஆகும்.

எனவே, தானியங்கி மின்சார இருதய துடிப்பு மறு சீரமைக்கும் கருவியை மேற்காணும் 3 பேருந்து நிலையங்களில் கோவை ரோட்டரி சங்கத்தின் மூலம் சில நிபந்தனைகளுடன் அமைத்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.471/2012/ எம். இ.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 205 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் : பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எதிர்பாராத விதமாக விஷவாயு தாக்கி மரணமடைந்த திரு.கே.ஆனந்தன் மற்றும் திரு.அசோக் ஆகியோரது வாரிசுகளுக்கு துப்புரவு பணியாளர் பணியிடம் வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிப்பது – தொடர்பாக.

****

திருமதி. அனிதா என்பவரின் கணவர் திரு.கே.ஆனந்தன் என்பவரும் திருமதி.ஜெயா என்பவரின் மகன் திரு.அசோக் என்பவரும் ஜென்னி ரெசிடென்சி கிளப்பில் 22.02.2011ம் தேதியன்று தனியார் மூலம் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் போது எதிர்பாராத விதமாக விஷவாயு தாக்கி இறந்து விட்டனர். மேலும் மேற்குறிப்பிட்டவர்கள் மாநகராட்சி பணியாளர்கள் இல்லை.

அவர்களது குடும்பம் மிகுந்த வறுமையில் வாடிக் கொண்டிருப்பதாலும், அவர்களது குடும்பத்தை காப்பாற்ற வேறு எவரும் இல்லாத காரணத்தாலும் காலம்சென்ற திரு.ஆனந்தன் என்பவரின் மனைவி திருமதி.அனிதா மற்றும் திரு.அசோக் என்பவரின் தாயார் திருமதி.ஜெயா ஆகியோர் கருணை அடிப்படையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் துப்புரவு பணியாளர் பணியிடம் வழங்க கோரி 29.05.2012 அன்று விண்ணப்பித்துள்ளனர். திருமதி. அனிதா என்பவர் ஒன்றாம் வகுப்பு படித்துள்ளார். திருமதி.ஜெயா என்பவருக்கு எழுதப்படிக்க தெரியும். மாநகராட்சி

பணியமைப்பு விதிகளின்படி துப்புரவு பணியாளர் பணியிடத்திற்கு தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருந்தால் போதுமானது.

எனவே ஆணையாளர் அவர்களின் 11.09.2012ம் தேதிய குறிப்பு உத்திரவின்படி மேற்படி நபர்களுக்கு இம்மாநகராட்சியில் துப்புரவு பணியாளர் பணியிடம் வழங்குவது தொடர்பாக மாமன்ற ஒப்புதல் பெற்று அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 59/2012/எம்சி5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 206 நாள் : 24.09.2012</u>**
அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் :– உதவித்தொகை – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*************

கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் விதவை/முதியோர் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரணை செய்து 184 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்களுக்கு உதவித்தொகை வழங்கவும் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் :–

| | |
|---|---|
| தகுதியுடையவர்கள் | 163 |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் | 15 |
| தவறான முகவரி | 2 |
| ஏற்கனவே BPL பட்டியலில் உள்ளவர்கள் | 4 |
| **மொத்தம்** | **184** |

எனவே, வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் வடக்கு அவர்களின் பரிந்துரையினையேற்று, மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய மொத்தம் 163 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 9820/2012/எம்.இ.6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 207 நாள் : 24.09.2012</u>**
அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

**பொருள்:-**கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுசுகாதாரம் தெரு நாய்கள் கருத்தடை – புதிய கட்டிடம் அமைத்தல் – தொடர்பாக.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தெரு நாய்களை கட்டுப்படுத்தும் விதமாக தெருநாய் கருத்தடை மையம் ஒன்று சீரநாயக்கன்பாளையத்தில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி கால்நடை மருத்துவ அலுவலர் தெருநாய்கள் கருத்தடை மையம் கூடுதலாக ஒன்று அமைக்கக் கேட்டுக்கொண்டுள்ளார். இதற்காக ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கவும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் 2012–13ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் (பட்ஜெட்) வெள்ளலூர் குப்பைகிடங்கின் அருகில் தெருநாய்களுக்காக ரூ.25 லட்சம் செலவில் கிடங்கு (காப்பகம்) அமைத்து பராமரிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகையை உக்கடம் கழிவுநீர் பண்ணை அருகில் புதிதாக தொடங்க உள்ள தெரு நாய்கள் கருத்தடை மையத்திற்கு மாற்றித்தரவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே 100 வார்டுகளாக மாநகராட்சி விரிவு படுத்தப்பட்ட காரணத்தாலும் நாய்கள் அதிக அளவில் கண்டறியப்பட்ட காரணத்தாலும் கூடுதலாக தெரு நாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மையம் ஒன்று அமைக்கலாம். மேலும் உக்கடம் கழிவுநீர் பண்ணை அருகாமையில் காலியாக உள்ள மாநகராட்சியின் காலியிடம் 20 சென்ட் இடத்தை தெருநாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மையமாக தற்காலிகமாக மாற்றலாம். 2012-13ம் வரவு செலவு திட்டத்தில் வெள்ளலூர் குப்பை கிடங்கு அருகாமையில் தெருநாய்களுக்கு ரூ. 25 லட்சம் செலவில் அமைக்கும் நாய்கள் காப்பகத்தின் தொகையை உக்கடம் கழிவுநீர் பண்ணைக்கு அருகில் தொடங்க உள்ள தெருநாய்கள் அறுவை சிகிச்சை மையத்திற்காக மாற்றித்தரலாம்.

எனவே ரூ.25 லட்சம் செலவில் கூடுதலாக தெருநாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மையம் அமைக்கவும் உக்கடம் கழிவுநீர் பண்ணைக்கு அருகாமையில் காலியாக உள்ள மாநகராட்சியின் காலியிடம் 20 சென்ட் இடத்தில் தெருநாய்கள் அறுவை சிகிச்சை மையத்தை அமைக்கும் பொருட்டு சுகாதார நிலைக்குழு தீர்மான எண் 16 நாள் 18.09.2012–ல் அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 5344/2008/எம்இ4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 208 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் 13**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்ட பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி | | | | | | |
| 1 | 2260/12/ எம்.டி5 | வார்டு எண் 41 ஓம் சக்தி நகரில் மாநகராட்சி அங்கீகரிக்கப்பட்ட பகுதியில் பூங்கா அமைத்தல் | 10.00 | 27.07.2012 (மூன்றாவது அழைப்பு) | 1. திரு. ஆர். நடராஜன் 6.97% அதிகம் 2. திரு. கே. ராமசாமி 3.50 % அதிகம் | திரு. கே. ராமசாமி 3.50 % அதிகம் |
| 2 | 1688/12/ எம்.டி5 | வார்டு எண்.81 சி.எம்.சி காலனி பகுதியில் சமுதாய கூடம் மற்றும் சுற்றுசுவர் கட்டுதல் | 8.60 | 27.07.12 (மூன்றாவது அழைப்பு) | 1. திருமதி. கே. பங்கஜம் 4.07% அதிகம் | திருமதி. கே. பங்கஜம் 4.07% அதிகம் |
| 3 | 3411/12/ எம்.டி5 | வார்டு எண்.51 காளிங்கராயன் வீதியில் சி.டி.எம் ஹோமிற்கு கூடுதலாக முதல் தளம் கட்டுதல் | 6.10 | 27.07.12 (மூன்றாவது அழைப்பு) | 1. திருமதி. கே. பங்கஜம் 4.53% அதிகம் | திருமதி. கே. பங்கஜம் 4.53% அதிகம் |
| 4 | 0087/12/ எம்.டி5 | வார்டு எண்.57 தியாகி சிவராம் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 9.40 | 27.07.12 (ஐந்தாவது அழைப்பு) | 1. திரு. கே. ராமசாமி 3.98 % அதிகம் 2. திரு. ஆர். நடராஜன் 4.75% அதிகம் | திரு. கே. ராமசாமி 3.98 % அதிகம் |
| 5 | 5264/12/ எம்.டி5 | வார்டு எண்.66 உடையாம்பாளையம் நூலக கட்டிடத்தில் படிக்கும் அறைக்காக முதல் தளம் கட்டுதல் மற்றும் படிக்கட்டு கழிவறை கட்டுதல் | 8.00 | 27.07.12 (மூன்றாவது அழைப்பு) | 1. திருமதி. வி. பாக்கியம் 4.71% அதிகம் | திருமதி. வி. பாக்கியம் 4.71% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2260/12/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 209 நாள் : 24.09.2012**
அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – ஆழியார் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குறிச்சி குனியமுத்தூர் பகுதிகளுக்கு சீரான குடிநீர் வழங்கவும், மின்தடையை நிவர்த்தி செய்யவும் மதிப்பீட்டுத் தொகை ரூ79,19,230/- தனி மின்பாதை தமிழ்நாடு மின்வாரியம் மூலம் டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் -தொடர்பாக.

பார்வை : ஆணையர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களது அனுமதி உத்தரவு நாள் 28/08/2012

-----------------

மேற்பார்வைப் பொறியாளர்/தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அவர்களது கடிதத்தில் (எண்.4862/F.GV/AE2/CNC/CBE/2012 நாள்14/08/2012) ஆழியார் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குறிச்சி குனியமுத்தூர் பகுதிகளுக்கு ஏற்படும் மின்தடையை நிவர்த்தி செய்யவும், சீரான குடிநீர் வழங்கவும், தமிழ்நாடு மின்வாரியம் மூலம் தடையில்லா மின்சாரம் பெற தனி மின்பாதை குறிச்சி பூஸ்டர் நிலையம் மற்றும் கிணத்துக்கடவு பூஸ்டர் நிலையங்களுக்கு அமைக்கவும் மதிப்பீட்டுத் தொகை ரூ35,37,205/- மற்றும் ரூ43,82,025/- மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ79,19,230/-ஐ செலுத்துமாறும் கோயம்புத்தூர் மாநகராட்சியை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தனி மின்பாதை அமைக்கும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய தடையில்லா மின்சாரம் பெறவும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ79,19,230/- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செலுத்தப்பட்டது. தனி மின்பாதை அமைக்கும் பணி டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் இத்தொகையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்திலிருந்து பிடித்தம் செய்யவும் மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.10388/2011/ப.வ.(எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 210 நாள் : 24.09.2012**
அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண் 5,6 மற்றும் 7 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை எட்டு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: துணை ஆணையர் அவர்களின் உத்திரவு நாள்: 26-07-2012.

---------

பார்வையில் கண்ட துணை ஆணையர் அவர்களின் உத்திரவு நாள்: 26-07-2012.ல் இம்மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5,6 மற்றும் 7 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு தேவைப்படும் 106 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எட்டு மாத (01-08-2012 முதல் 31-03-2013 வரை) காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.58,00,000/- ஆகும்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 5,6 மற்றும் 7 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.58,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:8310/2012/எம்.டி.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 211 நாள் : 24.09.2012</u>**
அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

### பொருள் எண் 16

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண் 8 மற்றும் 9 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை எட்டு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது - நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: துணை ஆணையர் அவர்களின் உத்திரவு நாள்: 26-07-2012.

--------

பார்வையில் கண்ட துணை ஆணையர் அவர்களின் உத்திரவு நாள்: 26-07-2012.ல் இம்மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 8 மற்றும் 9 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு தேவைப்படும் 100 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை எட்டு மாத (01-08-2012 முதல் 31-03-2013 வரை) காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.55,00,000/- ஆகும்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 8 மற்றும் 9 பகுதிகளில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.55,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:8311/2012/எம்.டி.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 212 நாள் : 24.09.2012</u>**
அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

### பொருள் எண் 17

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி சுவர்ண ஜெயந்தி திட்டம் – நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் 2012–13 தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது – தொடர்பாக.

------------

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி 2012–2013 ம் ஆண்டிற்கு STEP-UP பயிற்சி அளித்தல் தொடர்பாக 02.06.2012, 03.06.2012 மற்றும் 14.07.2012 ஆகிய நாட்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை தேர்வு செய்வது தொடர்பாக அனைத்து மண்டல அலுவலகங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் மூலமாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி சமுதாய அமைப்பாளர்கள் மூலமாகவும் பயனாளிகளை கண்டறிந்து விண்ணப்பங்கள் சேகரித்த வகையில் மொத்தம் 3350 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 864 நபர்கள் மட்டும் BPL பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். மீதமுள்ள 2486 விண்ணப்பதாரர்கள் BPL பட்டியலில் இடம் பெறவில்லை.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் **30.06.2012**ம் நாளைய உத்தரவிற்கேற்ப வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெறாத இந்த பயனாளிகளை மாநகராட்சி சமுதாய அமைப்பாளர்கள் ஆய்வு செய்து, இவர்களை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்து **2012–13** ம் ஆண்டிற்கான STEP-UP பயிற்சி வழங்குவதற்கு பட்டியல் சமர்ப்பித்துள்ளனர். சமுதாய அமைப்பாளர்களின் அறிக்கையினை ஏற்று இந்த **2486** நபர்களை பயிற்சிக்கு அனுப்புவதற்கு ஏதுவாக BPL பட்டியலில் சேர்க்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். **6100/2012**/எம்.இ.**6**

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 213 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் தகுதியான மீதமுள்ள நபர்களையும் முறைப்படி பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 25 க்குட்பட்ட கிருஷ்ணசாமி வீதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வணிக வளாகம் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.54,00,000-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:9347/2012/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 214 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் **57–**ல் மசக்காளிபாளையம் பிரதான சாலையில் வணிக வளாகம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ,**56,00,000.**/க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– அனுமதிக்கலாம் ந.க.எண் **010009 /2012** /எம்.டி.**3**

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 215 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

கோவை மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பிடங்களை ஏலதாரர்கள் மூலம் ஏலம்கூறி அவர்களால் கட்டணம் வசூலிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது கோவை மாநகராட்சியில் உள்ள 26 எண்ணிக்கை கட்டணம் முறை பொதுக் கழிப்பிடங்களை தனியார் பங்களிப்புடன் (P.P.P.Mode) புதுப்பித்தல், விளம்பரம் செய்து கொள்ளும் உரிமையுடன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்வதற்கு விருப்ப கேட்பு அறிக்கை (E.O.I.) கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : முதலில் பரிட்சார்ந்த முறையில் காந்திபுரம் நகர மற்றும் புறநகர் பேருந்து நிலையத்திற்கு கோரலாம். அதன் பின்னர் மற்ற பகுதிகளுக்கு விரிவு செய்யலாம்.

ந.க.எண்: 11111/2012/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 216 நாள் : 24.09.2012**

இத்திட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்படுபவர்கள் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு ஏதேனும் ஒன்றில் கட்டாயம் ஒரு கழிப்பிடத்தை பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 21**

| பொருள்- | கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண் 41- தமிழநாடு வீட்டு வசதி வாரியம் - கணபதி கிராமம் - காந்தி மாநகர் பேஸ்டு I/II மற்றும் III எனும் சைட் அண்டு சர்வீஸ் ஸ்கீம் மனைப்பிரிவு சமுதாயக்கூடத்திற்கு(கம்யூனிட்டி சென்டர் ) என ஒதுக்கப்பட்ட மனை இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் இடத்தினை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு வழங்கக் கோருதல் - தொடர்பாக. |
|---|---|

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 41 க்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதிவாரித்தால் கணபதி கிராமம் க.ச.எண் 26, 27, 28, 29 to 39, 48, 49, 50, 52, 53, 54, 55, 2B மற்றும் 40/2, 43/2, 45, 46, 47 ல் அமைக்கப்பட்ட காந்தி மாநகர் பேஸ்- II மற்றும் III எனும் சைட் அண்டு சர்வீஸ் ஸ்கீம் மனைப்பிரிவில் சமுதாயக்கூடத்திற்கு (கம்யூனிட்டி சென்டர்) என ஒதுக்கப்பட்ட மனை இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் இடத்தினை (திறவிடப்பரப்பு 38371 சதுரடி கட்டிடத்தின் பரப்பு 2700 சதுரடி ) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாநகராட்சிக்கு ஒப்படைக்க கோரி கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் எண் 222 நாள் 30.01.2012 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேலான்மை இயக்குநர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றப்பட்டு மேலான்மை இயக்குநர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை அவர்களுக்கு 02.02.2012 ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அரசு செயலாளர் தமிழ நாடு வீட்டு வசதி வாரியத்துறை அவர்கள் முன்னிலை 17.08.2012 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைபெற்ற ஆய்வுக் கூடத்தில் மேற்கண்ட சமுதாயக்கூடம் மற்றும் இடத்தினை குறைந்த வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் மாநகராட்சிக்கு ஒப்படைக்க உரிய பிரேரணையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. எனவே காந்திமாநகர் பகுதியில் உள்ள சமுதாயக்கூட மற்றும் இடத்தினை குறைந்த வாடகை நிர்ணயம் செய்து பராமரிப்பிற்கு உரிய உத்திரவுகள் வழங்ககோரி அரசுச் செயவலாளர் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.620/2012/எம்.எச்5(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 217 நாள் : 24.09.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் அவ்விடத்தில் இருக்கும் சுகாதார வளாகம் கட்டுவதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தை அத்திட்டம் செயல்படுத்தப்படும் வரை மாநகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைக்க வீட்டு வசதி வாரியத்தை கேட்டுக் கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 22**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் (SUNYA – ZERO WASTE MANAGEMENT PROJECT ) திட்டத்தின் கீழ் வரும் **29.10.2012** முதல் **31.10.2012** முடிய நேபாள நாட்டில் இத்திட்டம் தொடர்பாக கலந்து ஆலோசனை மேற்கொள்ள வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான பொறியாளர்கள் பங்குபெறுதல் – அரசின் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

**பார்வை :** **1.** அரசாணை எம்.எஸ். எண்.**147** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.**2**) துறை, நாள்.**29.09.2011.**

**2.** நிர்வாக செயலாளர் நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கம் (Municipal Association of Nepal) அவர்களின் கடித எண்.**68/068/069**, நாள்.**09.01.2012.**

**3.** நிர்வாக செயலாளர் நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கம் (Municipal Association of Nepal) அவர்களின் கடித எண்.**12/069/70**, நாள்.**10.08.2012** மற்றும் **15.08.2012.**

**4.** நிர்வாக செயலாளர் நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கம் (Municipal Association of Nepal) அவர்களின் கடித எண்.**12/069/70**, நாள்.**17.09.2012.**

--------

பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையில் சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் திட்டத்தில் (SUNYA – ZERO WASTE MANAGEMENT PROJECT) கோயம்புத்தூர் மாநகராட்சி பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் கண்ட நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கத்தின் நிர்வாக செயலாளர் அவர்களது கடிதத்தில் மேற்படி திட்டத்தின் துவக்க கூட்டம் வரும் **30.01.2012** முதல் **02.02.2012** முடிய நேபாள நாட்டின் காத்மண்டு நகரில் நடைபெற உள்ளதாகவும் அக்கூட்டத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் நிர்வாக காரணங்களினால் மேற்படி திட்டத்தின் துவக்க கூட்டத்திற்கு இம்மாநகராட்சி சார்பாக யாரும் பங்கேற்க இயலவில்லை.

இதனைத் தொடர்ந்து பார்வை 3ல் கண்ட நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கத்தின் நிர்வாக செயலாளர் அவர்களது கடிதத்தில் இத்திட்டம் தொடர்பாக கலந்து ஆலோசனை மேற்கொள்ளும் பொருட்டு இம்மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர், மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான பணிகளை கவனித்து வரும் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோரினை நேபாள நாட்டின் காத்மண்டு நகருக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் வருகை புரியும் தேதியினை தெரிவிக்குமாறு கேட்டுள்ளார். இம்மாநகராட்சி சார்பாக வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர், செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோர் அடங்கிய குழுவினர் வரும் **29.10.2012** முதல் **31.10.2012** ஆகிய தேதிகளில் நேபாள நாட்டின் காத்மண்டு நகருக்கு வருகை புரிய உள்ளதாக நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கத்திற்கு **07.09.2012** தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

பார்வை 4ல் கண்ட நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கத்தின் நிர்வாக செயலாளர் அவர்களது கடிதத்தில் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர், செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் ஆகியோர் அடங்கிய குழுவினர் வரும் **29.10.2012** முதல் **31.10.2012** ஆகிய தேதிகளில் நேபாள நாட்டின் காத்மண்டு நகருக்கு வர சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் அவர் மேற்படி குழுவினரின் அரசு முறை பயணத்திற்கு ஆகும் மொத்த செலவினங்களையும் மேற்கூறிய திட்டத்திற்கென ஏற்கனவே இம்மாநகராட்சிக்கென ஒதுக்கப்பட்ட மானியத்திலிருந்து நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கம் (Municipal Association of Nepal) மூலம் மேற்கொள்ளபடும் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே சூன்யா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் (SUNYA – ZERO WASTE MANAGEMENT PROJECT) திட்டம் தொடர்பாக கலந்து ஆலோசனை மேற்கொள்ளும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர், திரு.ஆ.லட்சுமணன், செயற்பொறியாளர் (JNNURM) மற்றும் திரு.கோ.சரவணக்குமார், உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) ஆகியோர் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். **109/2011/எம்சி6**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 218 நாள் : 24.09.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 23**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – **18.10.2012** முதல் **20.10.2012** முடிய சியோல் நகரம், கொரியா நாட்டில் நடைபெற உள்ள General Meeting of the World Mayors Council on Climate Change and the Opening of new ICLEI East Asia Secretariat – கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள் பங்குபெற – அரசின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை : மேயர், சியோல் அவர்களின் கடிதம் நாள் **20.09.2012.**

---

பார்வை 1ல் கண்ட கடிதத்தில் **18.10.2012** முதல் **20.10.2012** முடிய சியோல் நகரம், கொரியா நாட்டில் நடைபெற உள்ள General Meeting of the World Mayors Council on Climate Change and the Opening of new ICLEI East Asia Secretariat ல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் ஆணையாளர் அவர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள ஆகும் மொத்த செலவினங்களையும் ICLEI ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இம்மாநகராட்சிக்கு எவ்வித செலவினமும் இல்லை.

எனவே மேற்கூறிய கூட்டத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள அரசின் அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். **109/2011/எம்சி6**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 219 நாள் : 24.09.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான கட்டணம் – தொகைகளின் அடிப்படையில் அபராதக் கட்டணங்கள் நிர்ணயம் செய்தல் – தொடர்பாக.

பார்வை: வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தீர்மானம் எண்.113, நாள்.21.09.2012.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், கடைவாடகை மற்றும் குத்தகை இனங்கள் ஆகிய வரவினங்களுக்கு காசோலைகள் பெறப்படுகின்றன. தொகை செலுத்துபவரது வங்கி கணக்கில் உரிய இருப்பு தொகை இல்லாததால் காசோலைகள் வங்கியிலிருந்து திருப்பப்படுகிறது. அவ்வாறு திருப்பப்படும் காசோலைகளுக்கு வங்கி கட்டணமாக ரூ.100/– மாநகராட்சி வங்கி கணக்கிலிருந்து வங்கியினரால் சரிக்கட்டப்படுகிறது. ஆனால் தற்பொழுது திரும்ப பெறப்படும் காசோலைகளுக்கு மாநகராட்சியில் அபராதக் கட்டணமாக ரூ.1000/–ம் வங்கி கட்டணமாக ரூ.75/–ம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

எனவே வங்கியில் இருப்பு இல்லாமல் திரும்ப பெறப்படும் காசோலைகளுக்கு கீழ்க்கண்டவாறு அபராத கட்டணங்கள் நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.113, நாள்.21.09.2012–ன்படி அனுமதித்து மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.

| வ. எண். | திருப்பப்படும் காசோலைகளுக்கான தொகைகளின் விபரம் (ரூபாயில்) | | அபராத கட்டணம் (ரூபாயில்) | மொத்தம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 01 | 1 முதல் | 25000 வரை | 1000 + 100 | 1100/– |
| 02 | 25001 முதல் | 50000 வரை | 2000 + 100 | 2100/– |
| 03 | 50001 முதல் | 100000 வரை | 3000 + 100 | 3100/– |
| 04 | 100001 முதல் | 500000 வரை | 5000 + 100 | 5100/– |
| 05 | 500001 முதல் | 1000000 வரை | 10000 + 100 | 10100/– |
| 06 | 1000001 முதல் | 2000000 வரை | 20000 + 100 | 20100/– |
| 07 | 2000001 முதல் | 5000000 வரை | 50000 + 100 | 50100/– |
| 08 | 5000001 முதல் | 10000000 வரை | 100000 + 100 | 100100/– |

எனவே, இதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.8864/2012/A8(மே) (B-13)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 220 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 113 நாள் 21.09.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 25**

மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் அனுமதிக்கப் பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்கள் சென்னை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமிக்கப்பட வேண்டியவையாகும். தற்போது வரை மேற்படி பணியிடங்கள் நிரப்பப்படாததால், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு (PTA மூலம்) ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில் 28 ஆசிரியர்களும், பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில் மொத்தம் 17 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு தற்போது பணியாற்றி வருகின்றனர்.

அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட (PTA மூலம்) ஆசிரியர்களுக்கு, பிரதிமாதம் ரூ.7000/-வீதம் 19 ஆசிரியர்களுக்கு 6 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு அக்டோபர் 2012 முதல் மார்ச் 2013 வரை) ரூ.7,98,000/-ம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பிரதிமாதம் ரூ.5000/-வீதம் 5 ஆசிரியர்களுக்கு 6 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு அக்டோபர் 2012 முதல் மார்ச் 2013 வரை) ரூ.1,50,000/-ம் ஆக மொத்தம் ரூ.9,48,000/- செலவினமாகும். இத்தொகையினை ஒவ்வொரு மாதமும் சாதல்வார் பட்டியலிட்டு, சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பெற்று வழங்க அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்காண் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ள மாத ஊதியத்தினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்ற பொருள் வைக்க கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டு கல்விக்குழு தீர்மான எண். 11 நாள்.21.09.2012-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட (PTA மூலம்) ஆசிரியர்களுக்கு, பிரதிமாதம் ரூ.7000/-வீதம் 19 ஆசிரியர்களுக்கு 6 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு அக்டோபர் 2012 முதல் மார்ச் 2013 வரை) ரூ.7,98,000/-ம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பிரதிமாதம் ரூ.5000/-வீதம் 5 ஆசிரியர்களுக்கு 6 மாதங்களுக்கு (இந்நிதியாண்டிற்கு அக்டோபர் 2012 முதல் மார்ச் 2013 வரை) ரூ.1,50,000/-ம் ஆக மொத்தம் ரூ.9,48,000/- செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஒப்புதலுடன் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 424/2012/ கே 7

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 221 நாள் : 24.09.2012**

அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் PTA மூலம் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வரும் அனைத்து ஆசிரியர்களையும் விடுபடாமல் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கும் உயர்வு செய்யப்பட்ட தொகை வழங்கவும் அவர்கள் தொடர்ந்து பணிபுரிய அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 26**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி காலியாக உள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்களை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நிரப்புவது தொடர்பாக மன்றதத்தின் அனுமதி வேண்டுதல் தொடர்பாக.

--------------

**பார்வை :**

1. திரு.முத்துக்குமார் மற்றும் பலர் தொடர்ந்த நீதிப்பேராணை மனு எண்.19806/2008 மற்றும் பல்வகை மனு எண்.1/2008 மற்றும் 2/2008.
2. மாமன்றத் தீர்மானம் எண்.228, நாள். 29.08.2008.
3. நீதிப்பேராணை மனு எண்.19806/2008 வழக்கின் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு நாள். 26.07.2012.
4. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.08.09.2012.
5. திரு. ஆர். சிவக்குமார், வழக்கறிஞரின் கடிதம் நாள். 14.09.2012.

------

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 5 உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய, உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை அவர்களுக்கு 16.05.2008ல் கடிதம் அனுப்பப்பட்டதில், 4 உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு (General Turn Priority நீங்கலாக) 1:5 என்ற விகிதாச்சார அடிப்படையில் தகுதியான நபர்களின் பெயர்ப்பட்டியல் 18.06.2008ல் பெறப்பட்டது.

இவர்களை 08.08.2008 அன்று மாநகராட்சி பிரதான அலுவலகத்தில், நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜரான 10 நபர்களில், திரு. டி. சிவபரஞ்ஜோதி, திரு. பி. கணேசன், திரு. பி. ராஜேஷ்குமார் மற்றும் திருமதி. எம். ஹன்னா ஏஞ்சலின் ஆகிய தகுதியான நான்கு நபர்களை நியமனக்குழு தனது தீர்மான எண்.07, நாள். 08.08.2008–ல் தேர்வு செய்துள்ளது.

திரு. முத்துக்குமார் மற்றும் பலர் தொடர்ந்த நீதிப்பேராணை மனு எண்.19806/2008 மற்றும் பல்வகை மனு எண்.1/2008 மற்றும் 2/2008 வழக்கில், சென்னை உயர்நீதி மன்றம் 14.08.2008 மற்றும் 27.07.2009ம் தேதிகளில், மாநகராட்சியில் உள்ள தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் காலிப்பணியிடங்களில் பணி நிரப்பப்படும்போது மனுதாரர்களை பரிசீலனை செய்யாமல் வேறு எவரையும் நியமனம் செய்யக்கூடாது எனவும், 5 உதவிப் பொறியாளர் பணியிடங்களை காலிப்பணியிடமாக வைக்க, சென்னை உயர் நீதி மன்றம் இடைக்கால உத்திரவு பிறப்பித்திருந்தது.

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டப்பிரிவு 106 (2) (b)–ன்படி வகுப்பு II–ன் கீழ்வரும் பதவிகளை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதால் மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு உதவிப் பொறியாளர் பணியிடத்தில் 6500–200–11100 என்ற காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பணியிடங்களில், மாநகராட்சி பணியாளர் தவிர்த்து வெளியிலிருந்து நியமனம் செய்யக்கூடாது என உயர்நீதிமன்றம் தடையாணை பிறப்பித்துள்ளது. எனவே தடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்து, நீதிமன்ற முடிவின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடர மாமன்றத் தீர்மான எண்.228, நாள்.29.08.2008ல் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி இடைக்கால உத்திரவு (நீதிப்பேராணை மனு எண்.19806/2008) பார்வை 3ல் கண்டுள்ளவாறு சென்னை உயர்நீதிமன்றத்தால் 26.07.2012–ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நீதிப்பேராணை வழக்கு, தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி திரு. டி. சிவபரஞ்ஜோதி, திரு. பி. கணேசன், திரு.பி. ராஜேஷ்குமார் மற்றும் திருமதி. ஹன்னா ஏஞ்சலின் ஆகிய 4 நபர்களை உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்ய வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஏற்கனவே பெறப்பட்ட பட்டியலை மீண்டும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக மறு மதிப்பு (Revalidate) செய்ய வேண்டுமா என்பது குறித்தும், அதன் பின்னர் மன்றத்திற்கு மீள பொருள் சமர்ப்பிக்க வேண்டுமா என்பது குறித்தும் பார்வை 4–ல் காணும் ஆணையர் அவர்களின் உத்திரவின்படி மாநகராட்சி வழக்கறிஞர் திரு. ஆர். சிவக்குமார் அவர்களிடம் சட்டக் கருத்து கோரப்பட்டது.

பார்வை 5ல் காணும் மாநகராட்சி வழக்கறிஞர் திரு. ஆர். சிவக்குமார் அவர்கள் தமது 14.09.2012–ந்தேதிய கடிதத்தில், மேற்படி 4 நபர்கள் ஏற்கனவே 08.08.2008ல் நியமனக்குழுவால் தேர்வு செய்யப்பட்டுள்ளதாலும், (நீதிப்பேராணை மனு எண்.19806/2008) இடைக்கால தடையுத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாலும், மீண்டும் மாமன்றத்தின் அனுமதி பெற்று நியமனம் செய்யலாம் என தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, மேற்படி 4 நபர்களுக்கு இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 7 உதவி பொறியாளர் பணியிடத்தில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக மாமன்றத்திற்கு ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.2795/2007/எம்.சி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 222 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் மற்றும் மின் விளக்கு பராமரிப்பு சம்பந்தமான பணிகளை மேற்பார்வை செய்வதற்கு மன்றத்தில் நிர்வாக அனுமதி வேண்டுதல் தொடர்பாக.

---------------

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், குடிநீர் மற்றும் பொறியியல் பிரிவு சம்பந்தமான பணிகள் மற்றும் மின் விளக்கு பராமரிப்பு போன்ற பணிகளை மேற்பார்வை செய்வதற்கு தலா ஒரு பணியாளரை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.10540/2012/எம்.சி.1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 223 நாள் : 24.09.2012**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் மற்றும் மின் விளக்கு பராமரிப்பு சம்பந்தமான பணிகளை மேற்பார்வை செய்து ஒருங்கிணைப்பதற்கு அலுவலர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை அப்பணிகளுக்கு பணியாளர்களை நியமிக்க அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளதால் காலதாமதம் ஏற்படும் என்பதாலும், அப்பணிகளில் அனுபவம் வாய்ந்த தகுதிவாய்ந்தவர்கள் இல்லையென்பதாலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

கோவை மாநகராட்சி பகுதியில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5917/12/ எம்.டி.5 | பாராளுமன்ற உறுப்பினர் நிதி வார்டு எண்.18 வீரகேரளம் - சுண்டப்பாளையம் பகுதியில் பாலம் கட்டுதல் | 20.00 | 16-08-2012 முதல் அழைப்பு | 1. திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் - 19.78% அதிகம் 2.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் - 4.66% அதிகம் | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.66% அதிகம் |
| 2 | 7610/12/ எம்.டி.5 | சட்டமன்ற உறுப்பினர் நிதி வார்டு எண்.18ல் உள்ள வீரகேரளம் லிங்கனூர் சத்யா காலனியில் சிறுபாலம் அமைத்தல் | 9.00 | 13-08-2012 முதல் அழைப்பு | 1. திரு.ஆர். கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் - 6.45% அதிகம் 2. திரு.கே. ரவிக்குமார் கோயம்புத்தூர் - 12.48% அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் - 4.91% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 3 | 6494/12/ எம்.டி.5 | சட்டமன்ற உறுப்பினர் நிதி வார்டு எண்.19ல் உள்ள வீரகேரளம் பொங்காளியூர் பகுதியில் சத்துணவு கூடம் (ICDS) கட்டுதல் | 7.00 | 13-08-2012 முதல் அழைப்பு | 1.திரு. கோவிந்தராஜ் கோயம்புத்தூர் - 36.03% அதிகம் 2. தி/ள் லட்சுமி பில்டர்ஸ் கோயம்புத்தூர் - 4.88% அதிகம் | தி/ள் லட்சுமி பில்டர்ஸ் கோயம்புத்தூர் - 4.03% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 4 | 3573/12/ எம்.டி.5 | சட்டமன்ற உறுப்பினர் நிதி வார்டு எண்.84 கெம்பட்டி காலனி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்டுதல் | 26.90 | 16-08-2012 முதல் அழைப்பு | 1. திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் - 14.95% அதிகம் 2. தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் - 4.83% அதிகம் - | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.80% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மேலே அட்டவணையில் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 5917/2012/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 224 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 29**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – “ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டத்தின்கீழ்” (IUDM) பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்ற பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள “125” சாலைகளை புதுப்பித்தல் பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு அரசு மானியம் பெறப்பட்டதை மாமன்றத்தின் பதிவிற்கு வைத்தல் –தொடர்பாக.

பார்வை 1. மாமன்றத்தின் தீர்மான எண்.154 நாள் 30/11/2011
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MCII) துறை அரசாணை (MS) எண்.36 நாள் 30/03/2012
3. மாமன்றத் தீர்மான எண்.34 நாள் 27/04/2012
4. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை அரசாணை (D) எண்.225 நாள் 05/09/2012

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் “ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டத்தின்கீழ்” (IUDM) பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்ற பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள “125” சாலைகளை புதுப்பிக்க வேண்டி அரசிடம் நிதி ஒதுக்கீடு கோரி பார்வை 1–ல் கண்ட மாமன்றத் தீர்மானத்தின்படி நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கோரி அரசுக்கு மாமன்றம் அனுமதித்ததன்பேரில் பார்வை 2–ல் உள்ள அரசாணையில் “ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டத்தின்கீழ்” (IUDM) 146.46 கி.மீ நீளத்திற்கு ரூ 51.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை 3–ல் கண்ட மாமன்றத் தீர்மானத்தின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மற்றும் 15 சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி பெறப்பட்டது.

பார்வை 4–ல் கண்ட அரசாணையில் மேற்படி சாலைப் பணிகளை செய்ய அரசு மானியமாக இம்மாநகராட்சிக்கு ரூ.45.00 கோடிக்கு (IUDM)திட்டத்தில் 2012–2013–ன்கீழ் பெறப்பட்டுள்ளது. மேற்படி இச்சாலை பணிகளை செய்து முடிக்க தேவைப்படும் மீதமுள்ள தொகை ரூ.6.26 கோடியும், கூடுதல் ஒப்பந்தப்புள்ளி மற்றும் திரவத்தாரின் விலை சந்தை விலைக்கு ஏற்ப வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தையும், இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள அனுமதி வேண்டியும், பார்வை 4–ல் உள்ள அரசாணையை மாமன்றத்தின் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பதிவு செய்யலாம் ந.க.எண்.10897/2011/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 225 நாள் : 24.09.2012**

அரசாணை பதிவு செய்யப்பட்டது.

---

**பொருள் எண் 30**

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 97–ல் உள்ள தக்காளி மார்க்கெட்டிலுள்ள வணிக வளாக கடைகளுக்கு மறு ஏலம் / மின் ஏலம் 31.08.2012 அன்று நடைபெற்றது. இதில் கீழ் கண்ட வணிக வளாக கடைக்கு அதன் எதிரே கண்டவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ. எண் | கடை எண் | அரசாங்க மதிப்பு (மாதத்திற்கு) | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் அளித்துள்ள உயர்ந்த பட்ச தொகை | மின் ஏலம் / ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | 6 (110 ச.அடி) | ரூ. 4000 | எம். அன்புராஜ்<br>எஸ். பாலமுரளி கிருஷ்ணா<br>எச். அன்சார் அலி | 5300<br>7000<br>4500 | மின் ஏலம் |
| 2 | 18 (40 ச.அடி) | ரூ. 3000 | என்.ஜெயந்தி<br>ஏ. அன்வர் பாஷா | 3100<br>2400 | ஒப்பந்தபுள்ளி |

1. இதில் கடை எண் 6–க்கு திரு. எஸ். பாலமுரளிகிருஷ்ணா என்பவர் அரசாங்க மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ரூ. 7000/–க்கு (மாத வாடகையாக ) உயர்ந்த பட்ச தொகை கோரியுள்ளார்.

2. கடை எண் 18 க்கு திருமதி என். ஜெயந்தி அரசாங்க மதிப்பை காட்டிலும் கூடுதலாக ரு.3,100/–க்கு (மாத வாடகையாக ) உயர்ந்த பட்ச தொகை கோரியுள்ளார். முன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% வாடகை உயர்வு செய்யப்படும் மற்றும் 9 ஆண்டுகள் முடிவுற்ற பின் சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் இக்கடையினை ஒதுக்கீடு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 105 நாள் 21.09.2012 ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 210/2012/பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 226 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 105 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 31

**பொருள் :** வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் – மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்வதற்கு - மன்றத்தின் அனுமதி பெறுதல் - தொடர்பாக.

**பார்வை :**
1. அரசாணை எண்.147,ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.(ம).கு.வ.துறை நாள். 03.07.2007.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 116 நாள் 21.09.2012

******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பார்வையில் காணும் அரசாணையின்படி 9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள அனைத்து வரியில்லா இனங்களுக்கும் வாடகை உயர்வு செய்ய வேண்டியுள்ளது. எனவே அரசாணையின் படி மாநகராட்சி வடக்கு மண்டல பகுதியில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களுக்கு மாத வாடகையாக ரூ.100/- வசூல் செய்யப்படுவதை ரூ.300/- ஆக உயர்த்தி வசூல் செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 116 நாள் 21.09.2012ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 1780 /2012/ அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 227 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 116 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

பார்வை :
1. வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 69 நாள் 13.08.2012
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் 05.09.2012
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 102 நாள் 21.09.2012

******

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31 ல் விளாங்குறிச்சி ரோடு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிகவளாக கடைகளுக்கு ஒப்படை செய்யும் நாள் முதல் 31.03.2015 வரையிலான மூன்றாண்டுகளுக்கு உரிமம் ஒப்படை செய்வதற்கு முதல் பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.06.2012 மற்றும் 25.07.2012 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 68 நாள் 13.08.2012 ன் படி இக்கடைகளுக்கு மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 31.08.2012 ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 1, 2 மற்றும் 3 ஆகிய கடைகளுக்கு மட்டும் புதிதாக ஏல வைப்பு தொகைகள் செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். மீதமுள்ள கடை எண் 4,5 மற்றும் 6 ஆகிய கடைகளுக்கு புதிதாக ஒருவரும் ஏல வைப்பு தொகைகள் செலுத்தவில்லை. மேற்படி ஏலத்தில் கடை எண் 1 மற்றும் 2 ஆகிய இரண்டு கடைகளுக்கு கடந்த முறை ஏலத்தொகையினை காட்டிலும் கூடுதலாக ஏலத்தொகை பெறப்பட்டுள்ளதால் இக்கடைகளை ஒப்படை செய்யவும் மீதமுள்ள கடைகளுக்கு மறு ஏலம் விடவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 102 நாள் 21.09.2012ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

விளாங்குறிச்சி ரோடு வணிக வளாகம்

கடை எண் 1 அரசு மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ 4000/- (கடையின் அளவு 183 சதுரடி)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 25.07.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | 31.08.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி ஏலக்கோரிக்கை |
| 1 | திரு.உதயசங்கர் | 7300/- | - | - |
| 2 | திரு.ஆர்.எம். செந்தில்குமார் | - | - | 8200/- |

கடை எண் 2 அரசு மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ 4000/-(கடையின் அளவு 183 சதுரடி)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 25.07.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | 31.08.2012 ம் தேதிய உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை | |
|---|---|---|---|---|
| | | | மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி ஏலக்கோரிக்கை |
| 1 | திரு.டி.எஸ்ரா ஜான்சிங்ராஜ் | 4700/- | - | - |
| 2 | திரு.சபரி விக்னேஸ் | - | - | 7500/- |
| 3 | திரு.என். செந்தில் குமார் | - | - | 9000/- |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6508/2012/ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 228 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 102 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 33

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012, 25.4.2012 10.5.2012, 20.6.2012 மற்றும் 25.7.2012 -ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடர்பாக.

பார்வை: 1. ஏற்கனவே நடைபெற்ற மின்ஏல நாட்கள் 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012 25.4.2012,10.5.2012, 20.6.2012 மற்றும் 25.7.2012

2. ஒன்பதாவது மறுஏல நாள்.31.8.2012

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2012-2015 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே எட்டு முறை 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012, 25.4.2012, 10.5.2012, 20.6.2012 &25.7.2012 ஆகிய தேதிகளில் ஏலம் நடைபெற்றது. கீழ்கண்ட 17 இனங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏல மதிப்பினை விட குறைந்தபட்ச ஏலத்தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. எனவே இவ்வினங்களை 31.8.2012-ம் தேதியன்று மீண்டும் 9-வது முறையாக பொது மறு மின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

9-வது முறையாக நடைபெற்ற மறு ஏலத் தேதி – 31.8.2012

| வ. எண் | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | 25.7.2012 அன்று நடைபெற்ற ஏலதாரர் பெயர் | 31.8.2012 அன்று நடை பெற்ற ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச மின்ஏலக் கேள்வி தொகை / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் உணவகம், சமையல் அறை மற்றும் பண்டக அறை நடத்தும் உரிமம் (மாதாந்திர வாடகை அடிப்படையில்) | 73,500 | ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ள வில்லை | - | - |
| 2. | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகள் தினசரி வாடகை F67 ந.க.எண்.5024 / 2006/அ1(மே) | 100 | ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ள வில்லை | - | - |
| 3. | F70 | 75 | | | |
| 4. | F72 | 75 | | | |
| 5. | G85 | 75 | | | |
| 6. | G86 | 75 | | | |
| 7. | G87 | 75 | | | |
| 8. | H93 | 75 | | | |
| 9. | H94 | 75 | | | |
| 10. | H98 | 75 | | | |
| 11. | F68 | 75 | | | |
| 12. | B15 | 600 | K.K.அய்யப்பன்<br>C.R.வினாயகம் | 125.00<br>40.00 | 125.00 |
| 13. | E42 | 600 | S.செல்வகுமார்<br>C.R.விநாயகம் | 105.00<br>50.00 | 105.00 |
| 14. | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் நவீனகட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ந.க.எண்.497/ 2012 / A1(W) | 995945 | P.முருகேசன் | 812000.00 | 812000.00 |
| 15. | தடாகம் ரோடு நவீனகட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ந.க.எண் ந.க.எண்.497/ 2012 / A1(W) | 753900 | C.R.விநாயகம் | 506000.00 | 506000.00 |
| 16. | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ந.க.எண். 497/ 2012 / A1(W) | 2121210 | S.காளியப்பன்<br>அம்பிராஜ் | 725000.00<br>600000.00 | 725000.00 |
| 17. | டி.பி.ரோடு பள்ளி வளாகத்தில் உள்ள மைதானத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ந.க.எண். 497/ 2012 / A1(W) | 2236500 | P.முருகேசன் | 1726000.00 | 1726000.00 |

வரிசை எண்.1-ல் உள்ள மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் உணவகம், சமையல் அறை மற்றும் பண்டக அறை நடத்தும் உரிமம் (மாதாந்திர வாடகை அடிப்படையில்) இனத்திற்கு 25.7.2012 மற்றும் 31.8.2012-ந் தேதிய ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளததால் மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.2,3,4,5,6,7,8,9,10,11-ல் உள்ள பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் மேடை கடைகள் தினசரி வாடகை F67,F70,F72,G85,G86,G87,H93,H94,H98,F68 ஆகிய கடைகளுக்கு 31.8.2012-ந் தேதிய ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளததால் மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.12-ல் உள்ள பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் மேடை கடைகள் தினசரி வாடகை B15 கடைக்கு 31.8.2012-ந் தேதிய ஏலத்தில் உயா்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக திரு.K.K.அய்யப்பன் ரூ.125/-க்கு பெறப்பட்டுள்ளது. இது மாநகராட்சி நிா்ணய தொகையை விட குறைவாக உள்ளதால் மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.13-ல் உள்ள பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் மேடை கடைகள் தினசரி வாடகை E42 கடைக்கு 31.8.2012-ந் தேதிய ஏலத்தில் உயா்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக திரு.S.செல்வகுமாா் ரூ.105/-க்கு பெறப்பட்டுள்ளது. இது மாநகராட்சி நிா்ணய தொகையை விட குறைவாக உள்ளததால் மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.14.பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012, 11.4.2012 25.4.2012, 10.5.2012 மற்றும் 20.6.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிா்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இது மாநகராட்சி நிா்ணய தொகையைவிட குறைவு. 20.62012-ந் தேதிய மறு ஏலத்தில் ஏலத்தொகை ரூ.8,10,000/-கோரப்பட்டது. 31.8.2012-ம் தேதியில் நடைபெற்ற 9-வது மறு ஏலத்தில் கூடுதலான தொகையாக திரு.P.முருகேசன் ரூ.8,12,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேலும் ஏழு முறை ஏலம் கோரப்பட்டுள்ளதால் ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.15-ல் உள்ள தடாகம் ரோடு நவீனகட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012, 11.4.2012, 25.04.2012 10.5.2012 மற்றும் 20.6.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் நடத்தப்பட்டதில் நிா்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதிகபட்ச தொகை ரூ.5,03,000/-க்கு கோரப்பட்டது. இது மாநகராட்சி நிா்ணய தொகையை விட குறைவு. எனவே 1.4.2012 முதல் துறை மூலமாக வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி கட்டணகழிப்பிடத்தில் நாள் ஒன்றிற்கு சராசரியாக ரூ.820/- வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. (ரூ.820x365 நாட்கள்= ரூ.2,99,300/-) 20.06.2012-ந் தேதிய 7-வது ஏலத்தில் உயா்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5,05,009/- பெறப்பட்டுள்ளது. 8-வது ஏலத்தில் திரு.C.R.விநாயகம் உயா்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5,06,000/-க்கு பெறப்பட்டுள்ளது. இத்தொகை மாநகராட்சியால் நிா்ணயிக்கப்பட்ட(Base value) (ரூ.7,53,900/-) தொகையை விட குறைவாக உள்ளது. ஆனால் துறைவாரியாக வசூலிக்கப்பட்டு வரும் தொகையை விட அதிகமாக உள்ளது. மேலும் ஏழு முறை ஏலம் கோரப்பட்டுள்ளதால் ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.16-ல் உள்ள மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012,11.4.2012, 25.4.2012 10.5.2012, 20.06.2012, 25.07.2012 மற்றும் 31.8.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிா்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதிகபட்ச தொகை ரூ.6,51,000/- க்கு கோரப்பட்டது. இது மாநகராட்சி நிா்ணய தொகையை விட குறைவு. எனவே 1.4.2012 முதல் துறை வாரியான வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஒரு நாளுக்கு சராசரியாக ரூ.2240/- வசூலிக்கப்பட்டு வருகிறது. (ரூ.2240x365 நாட்கள்=ரூ.8,17,600/-) 25.7.2012-ந் தேதிய 8-வது மறுமின் ஏலத்தில் உயா்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.6,51,000/- பெறப்பட்டுள்ளது. /-) 31.8.2012-ந் தேதிய 8-வது மறுமின் ஏலத்தில் உயா்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.6,51,000/- பெறப்பட்டுள்ளது. இத்தொகையானது மாநகராட்சியால் நிா்ணயிக்கப்பட்ட (Base value) (ரூ.21,21,210/-) தொகையை விட குறைவாக உள்ளது. மேலும் துறைமூலமாக வசூலிக்கப்பட்டு வரும் தொகையை விடவும் குறைவாக உள்ளதால் மறுஏலம் கோரலாம்.

வரிசை எண்.17-ல் உள்ள டி.பி.ரோடு பள்ளி வளாகத்தில் உள்ள மைதானத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012,11.4.2012, 25.4.2012 மற்றும் 10.5.2012 ஆகிய தேதிகளில் பொது / மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிா்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 10.5.2012ம் தேதிய மறுஏலத்தில் ஏலத்தொகை ரூ.16,25,000/- க்கு கோரப்பட்டது. எனவே 1.5.2012 முதல் துறை வாரியான வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஒரு நாளுக்கு சராசரியாக ரூ. 1392/- வசூலிக்கப்பட்டு வருகிறது. (ரூ.1392x365 நாட்கள்=ரூ.5,08,080/-). 20.6.2012-ந்தேதிய 7-வது ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளியில் தொகைக்கு ரூ.17,17,777/- ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனா். 31.8.2012-ந்தேதிய 8-வது ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளியில்

தொகைக்கு ரூ.17,26,000/- ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர். மேலும் எட்டு முறை ஏலம் கோரப்பட்டுள்ளதால் வருவாய் இழப்பினை கட்டுப்படுத்த ஒப்படைப்பு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் தீர்மான எண்.98 நாள்.21.9.2012-ன் படி வரிசை எண். 14,15 மற்றும் 17-க்கு உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒதுக்கீடு செய்யவும், வரிசை எண். 1முதல் 13 மற்றும் 16 இனங்களை மறுஏலம் கோரவும் தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.497/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 229 நாள் : 24.09.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 98 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 34

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.10 மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்திலுள்ள குத்தகை இனமான பேருந்து நுழைவு கட்டண வசூல், பேருந்து நிலையத்தில் தரைதளத்திலுள்ள இரண்டு கட்டண கழிப்பிடம் ஆண்கள், பெண்கள் கட்டணம் வசூலிக்கும் உரிமம், குளீரூட்டப்பட்ட ஆண்கள்,பெண்கள் ஓய்வு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2011-12-க்கு திரு.M.செல்வம் என்பவர் ரூ,16,37,000/-க்கு குத்தகை எடுத்துள்ளார். மேலும் 2012-13-ம் வருடத்திற்கு மாமன்ற தீர்மான எண்.178 நாள்.16.8.2012ன் படி மேற்படி இனத்தை நடத்த 2011-12-ம் ஆண்டு வருட குத்தகைத்தொகையில் 5% கூடுதலாக வைத்து மாதமாதம் குத்தகைத்தொகை செலுத்தி நடத்திவருகிறார். மேற்படி குத்தகை இனம் தொடர்பாக பேருந்து உரிமையாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாலும் வழக்கின் தீர்ப்பை பொறுத்து நடத்துவதாக தெரிவித்த குத்தகைதாரர் மேற்படி தீர்ப்பின்படி இதுவரை நடைமுறை படுத்தாததால் தற்போது இவ்வினத்தால் மிகவும் நஷ்டம் ஏற்படுவதால் இவ்வினத்தை நடத்த இயலாது என 10.9.2012 அன்று முதல் மேற்படி குத்தகை இனத்தை ஒப்படைப்பதாக விண்ணப்பம் கொடுத்துள்ளார். மேற்படி குத்தகை இனத்தை தற்போது மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறைவாரியான வசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி குத்தகைதாரர் திரு.ஆ.செல்வம் அவர்களின் 10.9.2012-ம் தேதி முதல் குத்தகை இனத்தை ஒப்படைத்ததினை ஏற்பது தொடர்பாகவும், 2012-13-ம் ஆண்டிற்கு மேற்கண்ட இனத்தினை மறுஏலம் நடத்த வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.115 நாள்.29.9.2012-ல் அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.10104 / 2012 / A1(W)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 230 நாள் : 24.09.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 115 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 35

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் - வார்டு எண்.5,9 மற்றும் 16 வணிக வளாக கடைகள் - மூன்றாண்டு உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.5,9 மற்றும் 16 வணிக வளாக கடைகளை நேரில் ஆய்வு செய்த பொழுது வாடகை செலுத்தும் குத்தகைதாரர்கள் மூன்றாண்டு காலம் முடிவுற்றது என தெரிவித்துள்ளனர். எனவே, மூன்றாண்டு காலம் முடிவுற்ற வணிக வளாக கடைகளுக்கு மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள்) எண்.147-ன்படி மேற்படி கடைகளின் உரிமக்காலம் கீழ்கண்ட தேதிகளில் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பிக்க பார்வையில் காணும் அரசாணை (நிலை) எண். 92 - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07-ன் படி 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்த உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம்</u>
<u>வணிக வளாக கடைகள் விபரங்கள்</u>

<u>வார்டு எண்.5</u>

<u>இடம் : ஓணாப்பளையம் ரோடு - 10x 16 = 160 ச.அடி</u>

| வ. எண் | வ.வி. எண். | கடை எண் | பெயர் | உரிமம் ஒதுக்கீடு செய்த நாள் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப் பட வேண்டிய நாள் | மாத வாடகை | அரசு ஆணை எண். 92 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 3.7.07-ன் படி 15% உயர்வு செய்த மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20530 | 1 | புஷ்பராஜ் | 10.12.2007 | 31.3.2012 | 1.04.2012 | 6647 | 7644 |
| 2. | 20531 | 2 | புஷ்பராஜ் | 10.12.2007 | 31.3.2012 | 1.04.2012 | 5597 | 6437 |
| 3. | 20532 | 3 | சதீஸ்குமார் | 10.12.2007 | 31.3.2012 | 1.04.2012 | 3324 | 3823 |
| 4. | 20534 | 5 | P.வேலுச்சாமி | 10.12.2007 | 31.3.2012 | 1.04.2012 | 4461 | 5130 |

<u>வார்டு எண்.9</u>

இடம் : பிரபு நகர் கடைகள் - 10 x 8 = 80 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20535 | 1 | அபதுல்ஜப்பர் | 1.04.2005 | 31.3.2012 | 1.04.2012 | 1761 | 2052 |
| 2. | 20536 | 2 | ஷாஹின்ஷா | 1.04.2005 | 31.3.2012 | 1.04.2012 | 1876 | 2157 |
| 3. | 20537 | 3 | எஸ்.சுலைகா | 1.04.2005 | 31.3.2012 | 1.04.2012 | 1831 | 2106 |
| 4. | 20538 | 5 | அப்துல்ரஜக் | 1.04.2005 | 31.3.2012 | 1.04.2012 | 1806 | 2077 |
| 5. | 20539 | 6 | முகமதுபாரூக் | 1.04.2005 | 31.3.2012 | 1.04.2012 | 1806 | 2077 |
| 6. | 20540 | 7 | ஹாரூன் | 1.04.2005 | 31.3.2012 | 1.04.2012 | 875 | 1006 |

**..25..**

<u>வார்டு எண்.16</u>

இடம் : வடவள்ளி கடைகள் - 10 x 16 = 160 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தரை தளம் | | | | | | | |
| 1. | 20545 | 1 | P.ராதா | 1.04.2009 | 31.3.2012 | 1.04.2012 | 3300 | 3795 |
| 2. | 20546 | 2 | உக்கிரூன் | 1.04.2009 | 31.3.2012 | 1.04.2012 | 3060 | 3519 |
| 3. | 20547 | 3 | வெங்கடேஷ் | 1.04.2009 | 31.3.2012 | 1.04.2012 | 5000 | 5750 |
| 4. | 20548 | 4 | A.செய்யது அபுதாகீர் | 1.04.2009 | 31.3.2012 | 1.04.2012 | 2025 | 2779 |
| | முதல்தளம் | | | | | | | |
| 5. | 20549 | 1 | K.மோகன் | 1.04.2009 | 31.3.2012 | 1.04.2012 | 1380 | 1587 |
| 6. | 20550 | 2 | P.S.ஜெகன்நாதன் | 1.04.2009 | 31.3.2012 | 1.04.2012 | 1425 | 1639 |

மேற்படி கடைகளுக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகையில் 15% வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்கவும், வார்டு எண்.5 ஓணாப்பாளையம் ரோடு வணிக வளாக கடை எண்.4 மற்றும் பிரபு நகர் வணிகவளாக கடை எண்கள்.4,8,9,10 கடைகளை ஏலத்தில் விடவும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.99 நாள்.21.9.2012-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தினஅனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.12497/08/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 231 நாள் : 24.09.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 99 நாள் 21.09.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 36

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வார்டு எண்.22, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை B-11 காவல் நிலையத்திற்கு நிலபரிவர்த்தனை செய்ய கோரியது – தொடர்பாக.

பார்வை: மாநகர காவல் துறை ஆணையாளர் அவர்களது கடிதம் C.No.R1 / 22518 / 2005 நாள் : 06.09.2012

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.22, மேட்டுப்பாளையம் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் B-11 காவல் நிலையம் தற்பொழுது இயங்கி வருகிறது. மேற்படி இடத்தினை B-11 காவல் நிலையத்திற்கு காவல் ஆணையர் பெயருக்கு (நில அளவை வார்டு K(11) பிளாக்1 நகர நில அளவை புல எண்.2-ல்) நிலமாற்றம் செய்யவும், பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி மேற்படி இடத்தினை ஒப்படைப்பு செய்வது தொடர்பாகவும் அவசர அவசியத்தினை முன்னிட்டு முன் நுழைவு அனுமதி வழங்க அரசுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9702/ 2012 / எச்.1(W)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 232 நாள் : 24.09.2012</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு அரசு நிர்ணயம் செய்யும் மதிப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தையுடன் முன்நுழைவு அனுமதி வழங்க அரசுக்கு கருத்துரு அனுப்ப அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 37

பொருள் - வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் – மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் தொடர்பாக .

பார்வை : 1. அரசாணை எண்.147 நாள் 30.02.2000
2. அரசாணை எண். 92 நாள் 03.07. 2007

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பார்வையில் காணும் அரசாணையின்படி 9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்ய வேண்டியுள்ளது.

9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள அங்கன்வாடி மையங்களின் விபரம் .

| வ.எண் | மைய எண் | மைய இருப்பிடம் | தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் 12 மாதங்கள் | உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. 300 வீதம் (12 மாதங்களுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | 209 | கணேசபுரம் | 1200 | 3600 |
| 2. | 210 | ராமநாதபுரம் ஆரம்பள்ளி | 1200 | 3600 |
| 3. | 211 | ராமநாதபுரம் ஆரம்பள்ளி | 1200 | 3600 |
| 4. | 212 | பூசாரி மாரியப்பன் வீதி | 1200 | 3600 |
| 5. | 213 | மருதூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி | 1200 | 3600 |
| 6. | 214 | பெரியார் நகர் | 1200 | 3600 |
| 7. | 215 | பங்கஜாமில் சந்திப்பு | 1200 | 3600 |
| 8. | 216 | பங்கஜாமில் சந்திப்பு | 1200 | 3600 |
| 9. | 224 | பெரியார் நகர் | 1200 | 3600 |
| 10. | 301 | மருத்துவவிடுதி | 1200 | 3600 |
| 11. | 304 | செல்லாண்டியம்மன் கோவில் வீதி | 1200 | 3600 |
| 12. | 305 | கிருஷ்ணாபுரம் | 1200 | 3600 |
| 13. | 307 | அய்யர் லே அவுட் | 1200 | 3600 |
| 14. | 312 | உப்பிலிபாளையம் | 1200 | 3600 |
| 15. | 313 | உப்பிலிபாளையம் | 1200 | 3600 |
| 16. | 315 | உப்பிலிபாளையம் | 1200 | 3600 |
| 17. | 316 | ஒண்டிபுதூர் | 1200 | 3600 |
| 18. | 317 | ஒண்டிபுதூர் | 1200 | 3600 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | 318 | ஒண்டிபுதூர் | 1200 | 3600 |
| 20. | 319 | ஒண்டிபுதூர் | 1200 | 3600 |
| 21. | 320 | மசக்காளிபாளையம் | 1200 | 3600 |
| 22. | 321 | மசக்காளிபாளையம | 1200 | 3600 |
| 23. | 322 | நீலிக்கோணாம்பாளைம் | 1200 | 3600 |
| 24. | 324 | உப்பிலிபாளையம | 1200 | 3600 |
| 25. | 325 | கள்ளிமடை | 1200 | 3600 |
| 26. | 326 | கள்ளிமடை | 1200 | 3600 |
| 27. | 328 | பாரதிபுரம் | 1200 | 3600 |
| 28. | 329 | பாரதிபுரம் | 1200 | 3600 |
| 29. | 334 | பாரதிபுரம் | 1200 | 3600 |
| 30. | 335 | உடையாம்பாளையம் | 1200 | 3600 |
| 31. | 336 | உடையாம்பாளையம் | 1200 | 3600 |
| 32. | 337 | பாரதிபுரம் | 1200 | 3600 |
| 33. | 338 | உடையாம்பாளையம் | 1200 | 3600 |
| 34. | 340 | உடையாம்பாளையம் | 1200 | 3600 |
| 35. | 342 | உடையாம்பாளையம் | 1200 | 3600 |
| 36. | 343 | உடையாம்பாளையம் | 1200 | 3600 |
| 37. | 344 | பாரதிபுரம் | 1200 | 3600 |
| 38. | 363 | பீளமேடு புதூர் | 1200 | 3600 |
| 39. | 364 | பீளமேடு புதூர் | 1200 | 3600 |
| 40. | 365 | பீளமேடு புதூர் | 1200 | 3600 |
| 41. | 377 | எஸ்.ஐ.எச்.எஸ். காலனி | 1200 | 3600 |

எனவே, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்கள் ஏழைக்குழந்தைகள் வளர்ச்சிப்பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதால் மாத வாடகை தலா ரூ. 300/- வீதம் ஆண்டிற்கு ரூ. 3600/- ஆக வாடகை உயர்வு செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு தீர்மான எண் 95, நாள் 21.09.2012-ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் பேரில் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.16236/2007/ கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 233 நாள் : 24.09.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 95 நாள் 21.09.2012க்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 38

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை எண்- 2-க்கு 31.08.2012ம் தேதியில் நடைபெற்ற பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் - தொடர்பாக.

-----------------

மாத வாடகை இனங்களுக்கு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

<u>ராமகிருஷ்ணாபுரம் வணிகவளாகம் கடை எண் . 2</u>

| வ.எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட அரசுமாத வாடகைத் தொகை | மாத வாடகை உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச மாத வாடகைத் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத்தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு. தங்கராஜ் | 6125/- | … | 16,502 | 16,502 |
| 2. | திரு. அன்வர் பாஷா | | … | 6,000 | … |
| 3. | திரு.என். ரகோத்தமன் | | … | … | … |
| 4. | திரு.மணிவண்ணன் | | … | … | … |

எனவே ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாக கடை எண் 2- ஐ உயர்ந்த பட்ச ஏலத் தொகைரூ. 16502/- க்கு கோரியுள்ள ஏலதாரர் திரு. தங்கராஜ் என்பவருக்கு மேற்காணும் மாதாந்திர வாடகை உரிமையினத்தை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 97, நாள் 21.09.2012 –ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் பேரில் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலககுறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 8804/2012/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 234 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 97 நாள் 21.09.2012க்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 39

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - 57-வது மாமன்ற உறுப்பினர் - மசக்காளிபாளையம் ரோடு, காமராஜர் ரோடு – தனியார் நிலம் பேச்சுவார்த்தையின் மூலம் கையகப்படுத்தி இணைப்பு ஏற்படுத்துதுல் - தொடர்பாக.

பார்வை- மாமன்ற உறுப்பினர் - வார்டு 57 மற்றும் நகரமைப்பு அபிவிருத்தி குழு உறுப்பினர் திரு.ஆர்.மாரப்பன் - எம்.சி அவர்களின் 30.07.2012-ம் தேதிய மனு.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், 57-வது வார்டு பகுதி காமராஜர் சாலையிலிருந்து மசக்காளிபாளையம் சாலை செல்வதற்கு சென்னிமலைக் கவுண்டர் மனைப்பிரிவு சாலைக்கும், சின்னசாமிநாயுடு லே அவுட் பகுதி சாலைக்கும் இடையில் தனியார் நிலம் க.ச.எண்.60 பாகம் (உப்பிலிபாளையம் கிராமம்) 100 அடி நீளத்திலும், 20 அடி அகலத்திலும் இணைப்பு கிடைக்காத வகையில் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பல்லாயிரம் பொதுமக்கள் காமராஜர் சாலையிலிருந்து காந்திபுதூர் சென்னிமலை கவுண்டர் மனைப்பிரிவு சாலை வழியாக மசக்காளிபாளையம் சாலையினை சென்று அடைவதற்கு துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. தற்சமயம் பொதுமக்கள் மேற்காண் தனியார் இடத்தினை நீண்ட நாட்களாக சாலையாக போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்காண் தனியார் இடத்தின் வழியாக தெருவிளக்கு மின் வடம், கேபிள் டிவி வடம், குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. சாலை அமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்ய இயலாத வகையில் தனியார் இடமாக உள்ளது.

மேற்காண் தனியார் இடத்தின் நில உரிமையாளரிடம் பேச்சுவார்த்தை மூலம் சம்மத கடிதம் பெற்று மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யும் நிலத்தினை கையகப்படுத்தி காமராஜர் சாலை மற்றும் மசக்காளிபாளையம் சாலை இணைப்பினை ஏற்படுத்தலாம். இந்த இணைப்புச் சாலையினால் இராமானுஜ நகர், அலமேலு நகர், ஸ்ரீராம் நகர், காந்திபுதூர், சென்னிமலைகவுண்டர் புதூர், லட்சுமி நகர், பாலதண்டயுத நகர், லால்பகதூர் காலணி, மசக்காளிபாளையம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், பள்ளிக் குழந்தைகள், அலுவலக பணியாளர்கள், தொழிலாளர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் குடியிருப்போர் பயன்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதுடன் கால விரயங்களையும் தவிர்க்கும் வகையில் பொதுமக்களுக்கு பெருமளவில் பயன்பெற வாய்ப்புள்ளது.

எனவே, மேற்காண் தனியார் இடமான 100 அடி நீளம், 20 அடி அகலம் 2000 சதுரடி பரப்பளவு நிலத்தினை தனியார் பேச்சுவார்த்தையின் மூலம் கையகப்படுத்தி காமராஜர் சாலை, மசக்காளிபாளையம் சாலை இணைப்பினை ஏற்படுத்தலாம். நில உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டு தொகை மற்றும் சாலை அமைப்பதற்கு உரிய தொகையினை கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் மாநகர உள்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து பெற்று இணைப்புச் சாலை ஏற்படுத்தி மாநகராட்சிக்கு வழங்கும்படி உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு உத்தேசம் அனுப்பி வைக்கலாம்.

அலுவலக குறிப்பு - உள்ளூர் திட்டக் குழுமத்திடம் நிதிஉதவி பெற்று இணைப்புச் சாலையினை மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண். 11099/2012/ எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 235 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்படாவிடில் மேற்படி நிலத்தை கையகப்படுத்த சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 40

பார்வை : 1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 108 நாள் 21.09.2012

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 31.08.2012-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

வரிசை எண்.1

இதில் கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

| வ. எண் | மாதவாடகை கடைகள் | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| அ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் கடைகள் :<br>காய்கறி கடைகள் - 10<br>(கடைஎண்கள்,46,47 மற்றும் 95)<br>மாமிச கடைகள் - 9<br>(கடை எண்கள். 8,9,10,11,12,13,14,15, மற்றும் 16) | 950/– |
| ஆ | ஆம்னி பேருந்து நிலையத்தில் ராதாகிருஷ்ண ரோடு வணிக வளாகத்தில் அமைந்துள்ள இடத்தில் 117.10ச.மீ அளவுள்ள சிற்றுண்டி அறை. | 83,500/- |
| இ | சக்திரோடு ஆடு அறுவைமனை அருகிலுள்ள ஆட்டிறைச்சி கடைகள் : கடை எண். 1 , 2 மற்றும் 3. | 3,000/– |
| ஈ | திரு.வி.க. மார்க்கெட் கடைகள் : கடைஎண். 17 மற்றும் 18 | 2,100/– |
| உ | திரு.வி.க. மார்க்கெட் கடைகள் : கடைஎண். 1 மற்றும் 2 | 2,846/- |
| ஊ | ஒப்பணக்கார வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி எதிரிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண். 8 | 11,550/- |

வரிசை எண்.2

| வ. எண் | இனம் | 31.08.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| அ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடை- கடைஎண்.28<br>(அரசு மதிப்பு ரூ.950/–) | 600/-<br>(ஒப்பந்தப்புள்ளி) | திரு.ஹ.அன்வர்பாஷா |
| ஆ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடை - கடைஎண்.29<br>(அரசு மதிப்பு ரூ.950/–) | 1,050/-<br>(மின்ஏலம்) | திரு.ஹ.அப்துல் ஹக்கீம் |
| இ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடை - கடைஎண்.30<br>(அரசு மதிப்பு ரூ.950/–) | 1,050/-<br>(மின்ஏலம்) | திரு.ஹ.அப்துல் ஹக்கீம் |
| ஈ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடை - கடைஎண்.31<br>(அரசு மதிப்பு ரூ.950/–) | 1,050/-<br>(மின்ஏலம்) | திரு.ஞ.ஹ.உசேன் |
| உ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடை - கடைஎண்.32<br>(அரசு மதிப்பு ரூ.950/–) | 1,050/-<br>(மின்ஏலம்) | திரு.ஞ.ஹ.உசேன் |
| ஊ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடை - கடைஎண்.49<br>(அரசு மதிப்பு ரூ.950/–) | 1,050/-<br>(மின்ஏலம்) | திரு.முகமது இஸ்மாயில் |
| எ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் காய்கறி கடை -கடைஎண்.50<br>(அரசு மதிப்பு ரூ.950/–) | 1,050/-<br>(மின்ஏலம்) | திரு.முகமது இஸ்மாயில் |

மேற்படி இனத்திற்கு முதல் ஏலம் 11.04.2012-ம் தேதியிலும் அதன் பிறகு 25.04.12, 10.05.12, 20.06.12 மற்றும் 25.07.12 ஆகிய தேதிகளில் ஐந்து முறை மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஒருவரும் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை.

31.08.2012-ம் அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.28-க்கு அரசாங்க மதிப்பைக் காட்டிலும் குறைவாகவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே, இதனை மறு மின் ஏலம் கோரலாம்.

கடை எண்.29, 30, 31, 32, 49 மற்றும் 50-க்கு அரசுமதிப்பு ரூ.950/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.1,050/-க்கு மின் ஏலம் பெறப்பட்டுள்ளதுளது. எனவே, இக்கடைகளை உயர்ந்தபட்ச ஏலம் கோரிய திரு.A.அப்துல் ஹக்கீம், திரு.P.A.உசேன் மற்றும் திரு.முகமது இஸ்மாயில் ஆகியோருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண்.3

| மாதவாடகை கடை | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|
| காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண்.1-ல் கடை எண்.4 | 11,103/- |

மேற்படி இனத்திற்கு 31.08.2012-ம் தேதிய ஏலத்தில் திரு.V.மணிவண்ணன் மட்டுமே கலந்து கொண்டார். அவரிமிருந்து மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே இவ்வினத்திற்கு மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.4

| இனம் | தற்போது 31.08.12-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|
| டாக்டர் நஞ்சப்பாரோடு வணிக வளாக கடை எண்.18. (அரசு மதிப்பு ரூ.27,777/–) | ரூ.13,750/-<br>திரு.து.மனோகரன் |

மேற்படி இனத்திற்கு கடை எண்.18 -க்கு அரசுமதிப்பு ரூ.27,777/-ஐ காட்டிலும் குறைவாக ரூ.13,750/-க்கு திரு.J.மனோகரன் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தை மறு ஏலம் கோரலாம்.

வரிசை எண்.1 –ல் உள்ள இனத்திற்கு மறு மின் ஏலம் கோரலாம்.

வரிசை எண்.2–ல் அ இனத்தை தவிர ஆ முதல் எ வரைஉள்ள கடைகளை ஒதுக்கீடு செய்வது குறித்து உத்திரவு வேண்டப்படுகிறது.

வரிசை எண்.3 மற்றும் 4 க்கு மறு ஏலம் கோரலாம்.

மேற்படி இனங்களை குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 108 நாள் 21.09.2012ல் வரிசை எண் 1ல்- ‘இ’ இனத்தில் ஆட்டுறைச்சி தவிர்த்து பொது உபயோக கடையாக ஏலம் நடத்த தீர்மானிக்கப்பட்டது .

வரிசை எண் 2ல்- ‘ஆ முதல் எ’ வரை உள்ள கடைகளை ஒப்படை செய்யவும் ஏனைய கடைகளுக்கு மறு ஏலம் கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/10/அ1(ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் : 236 நாள் : 24.09.2012

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 108 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 41

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில் உள்ள வணிக வளாக கடை எண்.1,3,4 மற்றும் 5 - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக

பார்வை
1. 20.7.12–ம் தேதிய திரு.ஆ.மு.மீரானின் விண்ணப்பம்.
2. மாநகராட்சி வழக்கறிஞர் 10.08.12-ம் தேதிய கருத்துரை.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 110 நாள் 21.09.2012

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில் உள்ள வணிக வளாக கடை எண்.1,3,4 மற்றும் 5–யை திரு.M.K.மீரான் என்பவர் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுருந்தது. பார்வை 1-ன் படி மேற்படி கடைகள் அனுமதி பெறாத வேறொரு நபர் காலி செய்ய மறுத்ததால் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் காவல் துறை உதவியுடன் 14.08.12-ல் பூட்டி முத்திரையிடப்பட்டு மாநகராட்சி பொறுப்பு ஏற்று தற்போது காலியாக உள்ள கடைகளை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்வதற்காக பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின் படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் குறிப்பு கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.1,3,4 மற்றும் 5 | 1<br>3<br>4<br>5 | 226.04<br>339.07<br>339.07<br>339.07 | 27.25<br>27.25<br>27.25<br>27.25 | 6,160/-<br>9,230/-<br>9,230/-<br>9,230/- |

பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ்/ வங்கி உறுதி சான்றிதழ் அதற்கு ஈடாக செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

வைப்புத்தொகை - ரூ.1,00,000/-

காப்புத்தொகை - ரூ.50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது
வங்கி உறுதி சான்றிதழ் - ரூ.1,50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக
செலுத்த வேண்டிய தொகை - ரூ.75,000/-

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 110 நாள் 21.09.2012ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.7364/2012/அ9(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 237 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 110 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 42

**பொருள் -** வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் – மாநகராட்சி கட்டிடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி பெறுதல் - தொடர்பாக.

**பார்வை :** 1. அரசாணை எண்.147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள் 30.02.2000
2. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ. துறை நாள் 03.07. 2007
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 112 நாள் 21.09.2012

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பார்வையில் காணும் அரசாணையின்படி 9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வாடகை உயர்வு செய்ய வேண்டியுள்ளது.

9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள அங்கன்வாடி மையங்களின் விபரம் .

| வ. எண் | மைய எண் | மைய இருப்பிடம் | தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் 12 மாதங்கள் | உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. 300 வீதம் (12 மாதங்களுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | 41 | வீ.வீ.ஹோம் | 1200 | 3600 |
| 2. | 43 | நாடார் சந்து | 1200 | 3600 |
| 3. | 44 | உப்பு மண்டி | 1200 | 3600 |
| 4. | 51 | கெம்பட்டி காலனி | 1200 | 3600 |
| 5. | 52 | கெம்பட்டி காலனி | 1200 | 3600 |
| 6. | 52 | கெம்பட்டி காலனி | 1200 | 3600 |
| 7. | 60 | கெம்பட்டி காலனி | 1200 | 3600 |
| 8. | 61 | இராமர் கோவில் | 1200 | 3600 |
| 9. | 69 | இராஜ வீதி | 1200 | 3600 |
| 10. | 71 | தியாகிகுமரன் வீதி | 1200 | 3600 |
| 11. | 72 | தியாகிகுமரன் வீதி | 1200 | 3600 |
| 12. | 73 | தியாகிகுமரன் வீதி | 1200 | 3600 |
| 13. | 98 | வீ.வீ.ஹோம் | 1200 | 3600 |
| 14. | 06 | சுங்கம் | 1200 | 3600 |
| 15. | 07 | சுங்கம் | 1200 | 3600 |
| 16. | 08 | மருந்தகம், இராமநாதபுரம் | 1200 | 3600 |
| 17. | 17 | வி.வி.சி.ஆரம்ப பள்ளி | 1200 | 3600 |
| 18. | 18 | வி.வி.சி.ஆரம்ப பள்ளி | 1200 | 3600 |
| 19. | 19 | தாமுநகர் | 1200 | 3600 |
| 20. | 20 | தாமுநகர் | 1200 | 3600 |
| 21. | 21 | தாமுநகர் | 1200 | 3600 |
| 22. | 22 | தாமுநகர் | 1200 | 3600 |
| 23. | 30 | ஹவுசிங்யூனிட் (V.K.K.மேனன்சாலை) | 1200 | 3600 |
| 24. | 31 | ஹவுசிங்யூனிட் (V.K.K.மேனன்சாலை) | 1200 | 3600 |
| 25. | 32 | டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை | 1200 | 3600 |
| 26. | 59 | டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை | 1200 | 3600 |
| 27. | 36 | ஹரிபுரம் | 1200 | 3600 |
| 28. | 37 | ஹரிபுரம் | 1200 | 3600 |
| 29. | 42 | காமராஜபுரம் | 1200 | 3600 |
| 30. | 43 | காமராஜபுரம் | 1200 | 3600 |
| 31. | 60 | டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை | 1200 | 3600 |
| 32. | 61 | டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை | 1200 | 3600 |
| 33. | 65 | காவலர் குடியிருப்பு | 1200 | 3600 |
| 34. | 66 | காவலர் குடியிருப்பு | 1200 | 3600 |
| 35. | 67 | சித்தாபுதூர் | 1200 | 3600 |
| 36. | 69 | சித்தாபுதூர் | 1200 | 3600 |
| 37. | 70 | சிவானந்தாகாலனி | 1200 | 3600 |
| 38. | 75 | சீவானந்தாகாலனி | 1200 | 3600 |
| 39. | 77 | கண்ணப்ப நகர் | 1200 | 3600 |
| 40. | 78 | டாடாபாத் | 1200 | 3600 |
| 41. | 81 | கண்ணப்ப நகர் | 1200 | 3600 |
| 42 | 83 | ஹோஸ் மின் நகர் | 1200 | 3600 |
| 43 | 85 | இச்சிப்பட்டி காலனி | 1200 | 3600 |
| 44 | 86 | இச்சிப்பட்டி காலனி | 1200 | 3600 |
| 45 | 87 | இச்சிப்பட்டி காலனி | 1200 | 3600 |
| 46 | 88 | சங்கனூர் | 1200 | 3600 |
| 47 | 89 | சங்கனூர் | 1200 | 3600 |
| 48 | 92 | ரத்தினபுரி | 1200 | 3600 |
| 49 | 368 | நஞ்சுண்டாபுரம் ரோடு | 1200 | 3600 |
| 50 | 370 | நஞ்சுண்டாபுரம் ரோடு | 1200 | 3600 |
| 51 | 372 | நஞ்சுண்டாபுரம் ரோடு | 1200 | 3600 |
| 52 | 373 | நஞ்சுண்டாபுரம் ரோடு | 1200 | 3600 |

எனவே மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்கள் ஏழைக்குழந்தைகள் வளர்ச்சிப்பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதால் மாத வாடகை தலா ரூ. 300/- வீதம் ஆண்டிற்கு ரூ. 3600/- ஆக வாடகை உயர்வு செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 112 நாள் 21.09.2012ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.2313/12/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 238 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 112 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 43

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு – 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் அண்ணா வணிக வளாக கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் மன்றத்தின் அனுமதி பெறுதல் - தொடர்பு.

பார்வை :
1. அரசாணை எண்.147,ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.(ம).கு.வ.துறை நாள். 03.07.2007.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 103 நாள் 21.09.2012

******

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54-ல் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் அண்ணா வணிக வளாகத்தில் 23 கடைகளும் கோவை பெரியார் மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி விற்பனை சம்மேளனத்திற்கு ஒரு கடையும் தற்போது உபயோகத்தில் உள்ளது.

9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கடைகளுக்கு அரசின் ஆணை எண்.92 ந.நி.ம.கு.வ.துறை நாள். 03.07.2007-ன்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி உயர்வு செய்யலாம்.

மேலும், உதவி இயக்குநர் கோவை பெரியார் மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி விற்பனை சம்மேளனம் நிறுவனத்தாருக்கு மாமன்ற தீர்மான எண்.287 நாள். 29.02.2000-ன்படி மாத வாடகை ரூ.600-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது வரை ரூ.600 மட்டுமே மாத வாடகையாக செலுத்தப்பட்டுள்ளது. 01.04.2004 முதல் 31.03.2010 வரை 15 சதவீத உயர்வு தொகை ரூ.794/-ம் 01.04.2010 முதல் 31.03.2013 முடிய 15 சதவீத தொகை ரூ.914/-ம் நிர்ணையம் செய்து நிலுவைத் தொகையினை வசூல் செய்யலாம்.

உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% - யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக் கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுத்திட அனுமதி வேண்டப்படுகிறது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 103 நாள் 21.09.2012ல் காந்திபுரம் நகரப்பேருந்து நிலையம் அண்ணா வணிக வளாகத்தில் உள்ள 23 கடைகளுக்கு அலுவலக குறிப்பினை ஏற்று வாடகை நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

கோவை பெரியார் மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி விற்பனை சம்மேளனம் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை தவிர ஏனைய கடைகளும் வேறு நபர்களால் நடத்தி வருவது தெரியவருவதால் ஆய்வு செய்து உரிமத்தை ரத்து செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.7935/12/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 239 நாள் : 24.09.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 103 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 44

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண். 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மாநகராட்சி வணிகவளாக கடைகள் - மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண். 147,ந.நி.ம.கு.வ.(நநி 4) துறை நாள்.30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி(ம).கு.வ.துறை நாள்.03.07.2007.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 111 நாள் 21.09.2012

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54-ல் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வணிக வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்காக (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) ஒதுக்கீடு செய்யப்பட்ட 18 கடைகள் தற்போது உபயோகத்தில் உள்ளது.

9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கடைகளுக்கு அரசின் ஆணை எண்.92 ந.நி.ம.கு.வ.துறை நாள்.03.07.2007-ன்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி உயர்வு செய்யலாம். சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக் கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 111 நாள் 21.09.2012ல் உரிமம் ஒதுக்கீடு செய்து 9 ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு தற்போதைய சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

இக்கடைகளில் ஒதுக்கீடு பெற்றவர்கள் தவிர வேறு நபர்கள் கடைகளை நடத்தி வருவதாக தெரியவருவதால் தள ஆய்வு செய்து உரிம நிபந்தனைகளை மீறி நடப்பவர்களது உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் கொண்டுவர மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.5252/12/அ9(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 240 நாள் : 24.09.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 111 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 45

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - திரு.வி.க.மார்க்கெட் மாநகராட்சி வணிகவளாக கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை எண். 147,ந.நி.ம.கு.வ.(நநி 4) துறை நாள்.30.12.2000.
2.அரசாணை எண். 92 ந.நி(ம).கு.வ.துறை நாள்.03.07.2007.
3.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 109 நாள் 21.09.2012

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 72-ல் திரு.வி.க.மார்க்கெட் வணிகவளாகத்தில் மொத்தம் 63 கடைகள் உள்ளன. அவற்றில் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு பார்வைகளில் கண்டுள்ள அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கடைகளுக்கு 15 சதவீதம் உயர்வு செய்வதை காட்டிலும் அரசின் ஆணைப்படி பொதுப் பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.

அரசின் ஆணை எண். 92 ந.நி.ம.கு.வ.துறை நாள். 03.07.2007-ன்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி உயர்வு செய்யலாம். உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 109 நாள் 21.09.2012ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.1956 /2010 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 241 நாள் : 24.09.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 109 நாள் 21.09.2012ஐ அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 46

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் கிராமம் - க.ச.எண் 433/1 (நகர புல எண் 36, பிளாக் 26, சர்வே வார்டு எண் 34) நத்தம் புறம்போக்கில் 25 வருடங்களுக்கு மேல் வீடுகள் கட்டி வசித்து வரும் 55 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க இசைவு தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை : வட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களின் கடிதம் ந.க.எண் 13852/2012/ஆ 1 நாள் 08.09.2012

-----------

பார்வையில் கண்ட வட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களின் கடிதத்தில், கோயம்புத்தூர் தெற்கு வட்டம் உப்பிலிபாளையம் கிராமம், புல எண் 433/1 (நகர புல எண் 36, பிளாக் 26, சர்வே வார்டு எண் 34) நத்தம் புறம்போக்கில் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக வீடுகள் கட்டி வசித்து வரும் 55 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இந்நேர்வில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தீர்மானம் வடிவில் வழங்க ஆவண செய்யுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சியினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்பகுதி உப்பிலிபாளையம் கிராம் க.ச.எண் 433/1 மதுரை வீரன் கோவில் மேற்கு வீதி நீலிக்கோனாம்பாளையம் பகுதியில் அமைகிறது. வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 55 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவு தெரிவித்தல் தொடர்பாக மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தெரிவிக்கலாம்.

ந.க.எண் 11408/2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 242 நாள் : 24.09.2012**

பொருளில் கண்டுள்ள 55 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க இசைவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 47

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் உப்பிலிபாளையம் கிராமம் - க.ச.எண் 298/2 மற்றும் 304/2 இட்டேரி புறம்போக்கில் 5 வருடங்களுக்கு மேல் வீடுகள் கட்டி வசித்து வரும் 32 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க ஆட்சேபனை தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை : வட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களின் கடிதம் ந.க.எண் 15485/2012/ஆ 1 நாள் 21.9.2012

-----------

பார்வையில் கண்ட வட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களின் கடிதத்தில், கோயம்புத்தூர் தெற்கு வட்டம் உப்பிலிபாளையம் கிராமம் புல எண் க.ச.எண் 298/2 மற்றும் 304/2 இட்டேரி புறம்போக்கில் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக வீடுகள் கட்டி வசித்து வரும் 32 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு புலங்கள் தணிக்கை செய்யப்பட்டதாகவும், இடர்பாடுகள் ஏற்படும்பொழுது மீட்பு நடவடிக்கைக்கு இடையூறுகள் மற்றும் பாதகம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது என்றும், பிற்காலத்தில் ஆக்கிரமிப்பு பகுதி அரசுக்கு தேவைப்படுமா என்ற கருத்து பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளதாலும், இந்த இட்டேரி புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்திட கோவை மாநகராட்சியின் இசைவினை அல்லது ஆட்சேபனையினை தீர்மான வடிவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்பகுதி சிங்காநல்லூர் காமராஜர் ரோடு, மணீஷ் தியேட்டர் எதிர்புறம் ஏ.கே.ஜி. நகர் பகுதியில் அமைந்துள்ளது. இப்பொருள் தொடர்பாக மாமன்றத்தின் முடிவுற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** - வட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களின் கடிதத்தில் இடர்பாடுகள் ஏற்படும்பொழுது மீட்பு நடவடிக்கைக்கு இடையூறு மற்றும் பாதகம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது மற்றும் மேற்காணும் இடம் பிற்காலத்தில் அரசுக்கு தேவைப்படுமா எனும் கருத்து பரிசீலிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி இடத்தில் 32 வீடுகள் இட்டேரி புறம்போக்கு பகுதியிலும், பட்டா நிலத்திலும் இருந்து வருகின்றது. இதில் ஒவ்வொரு நபர்களும் சராசரியாக 650 சதுரடி இடம் வைத்துள்ளனர். இட்டேரி புறம்போக்கு பகுதி நிலத்தில் குறைந்த பட்சம் 150 சதுரடியிலிருந்து அதிக பட்சம் 400 சதுரடி வரை ஆக்கிரமிப்பு செய்தள்ளனர். குடியிருப்புகளின் முன்புறம் மாநகராட்சியால் கருங்கல் காலையும், கால்வாய் ஒரு பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளது. இணைப்புச் சாலையாக 20 அடி அகலத்தில் 4 சாலைகள் உள்ளன. இதில் இரு சாலைகள், காமராஜர் சாலையுடன் இணைந்துள்ளது. எனவே மேற்படி குடியிருப்புகளுக்கு பட்டா வழங்குதல் சம்பந்தமாக மாமன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண் 11409/2012/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 243 நாள் : 24.09.2012**

பொருளில் கண்டுள்ள 32 குடியிருப்புகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க இசைவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பட்டா கோரி விண்ணப்பித்துள்ள தகுதியான விண்ணப்பங்களின் மீது விரைவான நடவடிக்கை எடுக்க மாவட்ட வருவாய் துறையை கேட்டுக் கொள்ள மாநகராட்சி ஆணையர் மூலம் மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை கடிதம் அனுப்பலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 48

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ளமழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யும் பணிகளின்ஒப்பந்தகாலம் 30.09.2012ல் முடிவடையஉள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளிகோரி புதிய ஒப்பந்தப் புள்ளியை முடிவு செய்யும் காலம் வரை ஏற்படும் செலவினத்திற்கும் அனுமதியும் மற்றும் இதுவரையிலான செலவினத்திற்கு பின்னேற்பும் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | 6688/11/எம்.டி.3 | வடக்குமண்டலத்திற்குட்பட்டபகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கான மதிப்பீடு ரூ.49லட்சம் | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை |
| 2. | 6689/11/எம்.டி.3 | கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கான மதிப்பீடு ரூ.36லட்சம் | தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை |
| 3. | 6687/11/எம்.டி.3 | தெற்கு (பழைய) மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கான மதிப்பீடு ரூ.33லட்சம் | தி/ள். கே.சி.பி இன்ஜினியர்ஸ் & பேப்ரிக்கேட்டர்ஸ் , கோவை |
| 4. | 6690/11/எம்.டி.3 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கான மதிப்பீடு ரூ.49லட்சம் | திரு. ஆர்.மயில்வாணன், கோவை |

மேற்கண்ட பட்டியலில் உள்ளபடி ஏற்கனவே பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்ததாரர்களே முந்தைய விலைப்புள்ளிக்கே பணியினை மறு ஒப்பந்தப்புள்ளி கோரிமுடிவு செய்யும் வரை தொடரவும், அதற்குண்டான செலவினத்தை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கலாம்.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் :6687/2011/MD3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 244 நாள் : 24.09.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 49

**பொருள் :** கோவை மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடங்களில் TUFIDCO நிறுவனத்தின் கடனுதவி பெற்று வணிகப் பயன்பாட்டு கடைகள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி கோருதல்.

கோவை மாநகராட்சிக்கு சொந்தமான நான்கு மண்டலங்களில் உள்ள 25 காலியிடங்களில் ரூ.879.55 இலட்சங்கள் செலவில் 240 வணிகப் பயன்பாட்டுக் கடைகள் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை TUFIDCO நிறுவனத்திடமிருந்து கடனாக பெற்று பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் ஒப்பந்த புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | வார்டு | இடம் | கடைகளின் எண்ணிக்கை | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | மத்தியம் | 72 | வ.உ.சி பூங்கா சந்திப்பு | 8 | 22.50 |
| 2 | மத்தியம் | 50 | ராஜூ நாயுடு வீதி, டாடாபாத் | 8 | 28.60 |
| 3 | மத்தியம் | 52 | டாக்டர்.ராதாகிருஷ்ணன் ரோடு (புல் மார்கெட்) | 11 | 29.70 |
| 4 | மத்தியம் | 25 | புரூக்பாண்ட் ரோடு (புரூக் பீல்ட் எதிரில்) | 14 | 54.00 |
| 5 | மத்தியம் | 70 | புலியகுளம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி எதிரில் | 4 | 9.80 |
| 6 | கிழக்கு | 64 | வரதராஜபுரம், காமராஜர் ரோடு சந்திப்பு | 2 | 15.50 |
| 7 | கிழக்கு | 57 | சின்னசாமி லேஅவுட் | 4 | 17.60 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | கிழக்கு | 63 | திருச்சி ரோடு, கிழக்கு மண்டல அலுவலகம் அருகில் | 16 | 55.00 |
| 9 | கிழக்கு | 57 | மசக்காளிபாளையம் ரோடு | 20 | 56.00 |
| 10 | கிழக்கு | 64 | உப்பிலிபாளையம், வரதராஜபுரம் மெயின் ரோடு | 18 | 56.00 |
| 11 | கிழக்கு | 69 | புலியகுளம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி முன்புறம் | 2 | 4.90 |
| 12 | வடக்கு | 55 | செங்காடு மைதானம் | 2 | 8.20 |
| 13 | வடக்கு | 55 | காய்கடை மைதானம் | 6 | 20.95 |
| 14 | வடக்கு | 28 | சரவணம்பட்டி வார்டு அலுவலகம் | 8 | 29.50 |
| 15 | வடக்கு | 1 | துடியலூர் தினசரி சந்தை அருகில் | 12 | 49.80 |
| 16 | வடக்கு | 1 | துடியலூர் பேருந்து நிலையம் அருகில் | 12 | 49.80 |
| 17 | மேற்கு | 8 | வார்டு அலுவலக வளாகம் | 4 | 19.50 |
| 18 | மேற்கு | 5 | ஓணாப் பாளையம் மெயின் ரோடு, அசோக் நகர் கிழக்கு அருகில் | 5 | 20.00 |
| 19 | மேற்கு | 24 | ஆரோக்கியசாமி ரோடு மேற்கு, வடபுறம் A-பிளாக் | 20 | 67.50 |
| 20 | மேற்கு | 25 | ஆரோக்கியசாமி ரோடு மேற்கு, வடபுறம் B-பிளாக் | 20 | 67.50 |
| 21 | மேற்கு | 24 | ஆரோக்கியசாமி ரோடு மேற்கு, தென்புறம் | 7 | 37.00 |
| 22 | மேற்கு | 23 | திருவேங்கடசாமி ரோடு மேற்கு | 11 | 45.80 |
| 23 | மேற்கு | 23 | மேற்கு மண்டல அலுவலகத்தின் கிழபுறம் | 10 | 44.00 |
| 24 | மேற்கு | 17 | மருதமலை பேருந்து முனையம் | 10 | 44.00 |
| 25 | மேற்கு | 18 | மருதமலை பேருந்து முனையம் | 6 | 26.40 |
| | | | **மொத்தம்** | **240** | **879.55** |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் :10896/2012/எம்.டி1.

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 245 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 50**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 61 ல் உள்ள ஒண்டிப்புதூர் பகுதியில் குப்பை கொட்டும் நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு மதிப்பீடு. ரூ. 69,90,000-க்கு தயாரிக்கப்பட்டடு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் /2012/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 246 நாள் : 24.09.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி